ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:
ஸ்ரீமத் க்ருஷ்ணஸூரயே நம:

2892

ஸ்ரீஸூக்திமாலா
மலர்-14.

பரமகாருணிகரான
பெரியவாச்சான்பிள்ளை அருளிச்செய்த

திருப்பள்ளியெழுச்சி வ்யாக்யாநம்

[பதவுரை, அரும்பதவுரை, ப்ரமாணத் திரட்டுகளுடன் கூடியது]

பதிப்பாசிரியர்:-

ஸ்ரீ. ௳. கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார்,
அட்வகேட்,

3, புத்தூர் அக்ரஹாரம், திருச்சி.

விலை 0—8—0
தபாற்கூலி 0—1—0

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீஸூக்திமாலா

மலர்-14

பரமகாருணிகரான பெரியவாச்சான் பிள்ளை

அருளிச்செய்த

திருப்பள்ளியெழுச்சி
வ்யாக்யானம்

[பதவுரை, அரும்பதவுரை, ப்ரமாணத்திரட்டுகளுடன்கூடியது]

★

பதிப்பாசிரியர்:-

ஸ்ரீ. கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார், அட்வகேட்,

3, புத்தூர் அக்ரஹாரம், திருச்சி.

★

விலை 0-8-0

தபாற்கூலி 0-1-0

ஸ்ரீநிவாஸம் பிரஸ், புத்தூர், திருச்சி.

முகவுரை

"உத்திஷ்ட புருஷ ஹரீ லோஹிதபிங்களாக்ஷி" [தைத்திரீய நாராயணவல்லீ] [செந்தாமரைபோல் சிவந்த கண்ணனே! புருஷனே! ஹரியே! எழுந்தருளாய்] என்று பரமபுருஷனுக்கு அஸாதாரணமான இரண்டு திருநாமங்களையும், புண்டரீகாக்ஷத்வமாகிற லிங்கத்தையுமிட்டு அழைத்து அவனுக்குத் திருப்பள்ளியெழுச்சி பாடினான் வேதபுருஷன்.

"கௌஸல்யாஸுப்ரஜா ராம பூர்வா ஸந்த்யா ப்ரவர்த்ததே ।
உத்திஷ்ட நரசார்த்தூல கர்த்தவ்யம் தைவமாஹ்நிகம் ॥"
[ரா-பா 23-2]

[கோசலையின் குலக்கொழுந்து ராமனே! விடியற்காலைநேரம் நடக்கின்றது. மனிதப்புலியே! பரமாத்மாராதனமான காலைக்கடன்களைக் கழிக்கவேண்டும்] என்று ஸ்ரீவிச்வாமித்ர பகவானும்

"வீர ஸௌம்ய விபுத்யஸ்வ கௌஸல்யாநந்தவர்த்தந ।
ஜகத்தி ஸர்வம் ஸ்வபிதி த்வயி ஸுப்தே நராதிப ॥" [ரா-உ 37-4]

[கௌசல்யையின் இன்பத்தை வளர்க்கும் அழகனே! பள்ளியெழுந்தருள்வாயாக. அரசனே! நீ உறங்கினால் உலகெல்லாம் உறங்குகிறது.] என்று வந்திகளும் ராமபிரானைத் திருப்பள்ளி உணர்த்தியதாகப் பாசுரமிட்டான் ஸ்ரீவால்மீகிபகவான் இதிஹாஸச்ரேஷ்டமான ஸ்ரீராமாயணத்தில். இப்படி ச்ருதிஸ்ம்ருதிஸித்தமான அர்த்தத்தைப் பெருமாளுக்கும் பெருமாளான பெரியபெருமாள் விஷயத்திலே அநுஷ்டித்துக்காட்டினார் தொண்டரடிப்பொடியாழ்வார்.

"ய ஏஷு ஸுப்தேஷு ஜாகர்த்தி" [கட 2-5-8] [இந்த எல்லாச் சேதனரும் உறங்குகையில் எவனொருவன் விழித்திருக்கிறானோ] என்றும் "உறங்குவான்போல் யோகு செய்த பெருமானை" [திருவாய் 5-4-11] என்றும் மறைகள் அறைகின்றபடியே மற்றுள்ளார் உறங்கும் போதும் இவன் விழித்திருக்க, இவனை இவ்வாழ்வார் உணர்த்துகையாவதென்? என்னில்: அநாதிமாயையால் இவர் உறங்கிக்கிடந்தபோது உறக்கமற்றிருந்து இவரை உணரச்செய்து, இவர் "அடியரோர்க்ககலலாமோ" [திருமாலை-20] என்று அநுஸந்திக்கும்படி அகலமுடியாதபடி உணர்ந்தவுடன், நிர்ப்பரனாய் மார்பிலே கைவைத்து உறங்கப்புகுந்தான் அரங்கத்தம்மான். அவனுக்கு உறக்கமாவது:—"ஆத்மாநம் வாஸுதேவாக்யம் சிந்தயந்" [வி-பு 6-4-6] என்கிற தன் ஸ்வரூபசிந்தனமும் கைப்பட்ட ஆழ்வாரைப்பற்றிய அநுபவமும் செய்துகொண்டு மற்ற விஷயங்களில் ஈடுபடாமலிருக்கை. "எம்பிரானுக்காட்செய்யாதே என் செய்வான் தோன்றினேனே" [திருமாலை—28] என்னும்படியான கைங்கர்யத்வரையை உடையவராகையாலும், தம்மை உணர்த்தியதுபோலே பெருமான் பிறரையும் உணர்த்தி ஆட்கொள்ளவேணும் என்னும் ஆசையுடையவராகையாலும்

இவர் ஸர்வேச்வரனைத் திருப்பள்ளியுணர்த்துகிறாராகையாலே விரோதமில்லை.

இத்தொண்டரடிப் பொடியாழ்வார் திருமண்டங்குடியென்னும் திவ்ய தேசத்திலே பூர்வசிக ஸ்ரீவைஷ்ணவ ப்ராஹ்மணோத்தம குலத்திலே ''விப்ரநாராயணர்'' என்னும் திருநாமத்தையுடையவராய், பகவானுடைய வநமாலையின் அம்சபூதராய்த் தோன்றியவர். மாலையின் அவதாரமான இவர் ''துளவத்தொண்டாய தொல்சீர்'' [திருமாலை—45] என்றும், ''தொடையொத்த துளவமும் கூடையும் பொலிந்து தோன்றிய தோள் தொண்டரடிப்பொடியென்னும் அடியன்'' [திருப்பள்ளி—10] என்றும் தாமே அருளிச்செய்தபடியே மாலாகாரகைங்கர்யத்திலே நிலைநின்றவராய் விளங்கிவந்தார். ''அடியார்க்காட்படுத்தாய்'' என்று ப்ராப்யத்தின் எல்லை நிலமான பாகவத கைங்கர்யத்திலே ஊன்றி நிற்பவராய், ''தொண்டர் அடிப் பொடி'' என்று அதுவே தமக்கு நிரூபகமாம்படி விளங்கினார். அர்ச்சாவதார எம்பெருமான்களிலும் அரங்கனைத்தவிர வேறு எவரையும் பாடமாட்டாதவராய், ''அச்சுவை பெறினும் வேண்டேன்'' என்னுமவராய், மறந்தும் புறந்தொழாமையாகிற பாதிவ்ரத்யத்தின் எல்லைநிலத்திலே நின்றார். இவர் எம்பெருமானுக்குச் சூட்டிய பாமாலைகள் இரண்டு. அவற்றிலே திருமாலையை வியாக்கியானத்தோடு அஸ்மத்தாதபாதர்கள் ஸ்ரீஸூக்திமாலை ஆறாவது மலராக ஸமர்ப்பித்தனர். இப்போது திருப்பள்ளியெழுச்சியாகிற * ஸூக்திமாலையைப் பதினான்காவது மலராக ஸமர்ப்பிக்கின்றேன் அடியேன்.

இப்பிரபந்தத்திற்கு நம் பாக்கியத்தாலே நஞ்சீயர் பெரியவாச்சான் பிள்ளை ஆகிய இருவரும் வியாக்கியானமருளிச்செய்துள்ளார்கள். எம்பெருமானாருடைய சிஷ்யர் கூரத்தாழ்வான்; அவருடைய குமாரரும் சிஷ்யருமானவர் (ஸ்ரீபராசர) பட்டர். அவருடைய சிஷ்யர் நஞ்சீயர். ''நஞ்சீயர் செய்தவை நாலிரண்டுக்கு'' என்று மணவாளமாமுனிகள் அருளிய வியாக்கியானங்களிலே இத்திருப்பள்ளியெழுச்சிவ்யாக்யானமும் ஒன்று. திருவாய்மொழிக்கு இவரருளிய ஒன்பதினாயிரப்படியைப்போலே அநதிஸங்க்ஷேப விஸ்தரமாய், அர்த்தபுஷ்டியுள்ளதாய் விளங்குகிறது இவ்வியாக்கியானம். நஞ்சீயருடைய சிஷ்யர் நம்பிள்ளை. அவருடைய ப்ரதமசிஷ்யர் பெரியவாச்சான்பிள்ளை; நாலாயிரம் முழுவதற்கும் வியாக்கியானம் செய்தருளிய மஹாநுபாவர். இவருடைய இவ்வியாக்கியானமும் பரமபோக்யமாய் விளங்குகிறதென்பது சொல்லாமலே விளங்கும். அடுத்தபடியாக அமலனாதிபிரான் வ்யாக்யானங்களும், கண்ணிநுண் சிறுத்தாம்பு வ்யாக்யானங்களும் வெளியிடப்பட்டு முதலாயிர வ்யாக்யானங்களில் பெரும்பகுதி முடிவுபெறும்.

தாஸன்,

மந்மத-ஹூ
ஆவணியில் உத்திரம்.

ஸ்ரீ. கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார்,
3, புத்தூர் அக்ரஹாரம், திருச்சி.



ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

மயர்வறமதிநல மருளப்பெற்ற, தொண்டரடிப்பொடியாழ்வார்
திருவாய்மலர்ந்தருளிய

திருப்பள்ளியெழுச்சி

தனியன்

திருமாலையாண்டான் அருளிச்செய்தது

तमेव मत्वा परवासुदेवं रङ्गेशयं राजवदर्हणीयम्।
प्राबोधिकीं योऽकृत सूक्तिमालां भक्ताङ्घ्रिरेणुं भगवन्तमीडे॥

தமேவ மத்வா பரவாஸுதேவம்
ரங்கேஶயம் ராஜவதர்ஹணீயம் |
ப்ராபோதிகீம் யோऽக்ருத ஸூக்திமாலாம்
பக்தாங்க்ரிரேணும் பகவந்தமீடே ||

பதவுரை:—ய:—*யாவரொரு ஆழ்வார்*, ராஜவத் — *அரசனைப் போல்*, அர்ஹணீயம்—*பூஜிக்கத்தக்கவராய்*, ரங்கேஶயம்—*திருவரங்கத்தரவணையில் பள்ளிகொள்பவரான பெரியபெருமாளை*, தம்பரவாஸுதேவம் ஏவ—*அப்படிப்பட்ட ஸாக்ஷாத் பரவாஸுதேவனாகவே*, மத்வா—*ப்ரதிபத்திபண்ணி*, ப்ராபோதிகீம்—*திருப்பள்ளியுணர்த்துமதான*, ஸூக்திமாலாம்—*பாமாலையை*, அக்ருத—*அருளிச்செய்தாரோ*, (தம்—*அப்படிப்பட்ட*) பகவந்தம்—*ஞானம் முதலிய குணங்கள் அமைந்த*, பக்தாங்க்ரிரேணும்—*அமைந்த தொண்டரடிப்பொடியாழ்வாரை*, ஈடே—*துதிக்கின்றேன்.*

அவதாரிகை:—(*தமேவமத்வேத்யாதி*) *இச்லோகத்தில் * செய்யும் பசுந்துளவத் தொழில்மாலையை எப்போதும் செய்துபோருவாராய், விஶேஷித்துச் * செந்தமிழில் பெய்யும் மறைத்தமிழ் மாலையும் பேராத சீரரங்கத்தையன் கழற்கணியுமவரான தொண்டரடிப்பொடியாழ்வாரை ஸ்துத்யபிவாதநம் பண்ணும்படி சொல்லுகிறது. "திருமாலை" என்கிற திவ்யப்ரபந்தமன்றிக்கே திருப்பள்ளியெழுச்சியையும், (ப்ராபோதிகீம் யோக்ருத ஸூக்திமாலாம்) என்று சொல் மாலையாகவிறே சொல்லுவது. இதுதான் திருப்பள்ளியெழுச்சித் தனியனாயிருப்பது.*

வ்யா:-(ராஜவதர்ஹணீயம்-ரங்கேஶயப்-பரவாஸுதேவம்-மத்வா) அதாவது-ராஜவத் பூஜ்யராய், ரங்கராஜதாநியிலே கண்வளர்ந்தருளு மவரான ஸ்ரீரங்கராஜரை ச்ருதிப்ரஸித்தரான பரவாஸுதேவராகவே ப்ரதிபத்தி பண்ணியென்றபடி. ராஜவதர்ஹணீயராகையாவது ராஜ வத் பூஜ்யரென்றபடி. ராஜாதிராஜரான சக்ரவர்த்தித்திருமகனுராலும் ஆராதநீயராயிருக்கை. (ரங்கேஶயம்) அதாவது †"செருவிலேயரக் கர்கோனைச்செற்ற நம்சேவகனுர் மருவிய பெரியகோயில்" என்றும், 1. "**पुनरपि पुरस्कृतुं श्रीरङ्गिणः फणिपुङ्गवे**" (புநரபிபுரஸ்கர்த்தும் ஸ்ரீரங் கிண: பணிபுங்கவே) என்றும், §"அரங்கத்தரவணைப்பள்ளியான" என்றும் பேசும்படி, * அரங்கந்தன்னுள் பாம்பணைப்பள்ளிகொள் ளுகை. இப்படி படுக்கைவாய்ப்பாலே பள்ளிகொண்டருளும பெரிய பெருமாளை.

(பரவாஸுதேவம்-மத்வா) 2. "**वासुदेवोऽसि पूर्णः**" (வாஸு தேவோஸி பூர்ண:) என்கிற அந்தப்பரவாஸுதேவராகவே புத்தி பண்ணி; இங்குத்தையிற்படியை விசாரியாதே அங்குத்தையிற்படி யாகவே அநுஸந்தித்து. ‡"ஆதியஞ்சோதியுருவை யங்குவைத் திங்குப் பிறந்த" என்றும், i"நெஞ்சினுல் நினைப்பானவன் அவனு கும் நீள்கடல் வண்ணன்" என்றும் சொல்லக்கடவதிறே. * கடலி டங்கொண்ட கடல்வண்ணனிறே பெரியபெருமாள். ஆகையால் * பூர்ணஷாட்குண்யமாய் * ஸர்வம் பூர்ணமாயாய்த்து இங்குத் தையில் அவர்படியிருப்பது. அத்தாலே * யாவரும்வந்தடி வணங்கும் படி ஸர்வஸமாச்ரயணீயமாயாய்த்து இவ்விஷய மிருப்பது. அவதார ணத்தாலே-கைங்கர்யம் பண்ணுமிடத்து ||"முகப்பேகூவி"3. "**क्रियाता मिति**"(க்ரியதாமிதி)என்று ஏவிக்கொண்டு, * வாளுடமரும் குளிர்விழி களாலே எதிர்விழி கொடுக்கும்விஷயமாகவே இவரை புத்திபண்ணி, /"ஆதிமூர்த்தி அரங்கமாநகருளானே" என்றும், c"இந்திரலோக மாளுமச்சுவைபெறினும் வேண்டேன் அரங்கமா நகருளானே" என்றுமன்றோ இவ்விஷயத்திலே இவர் மண்டியிருப்பது. (ராஜவதர் ஹணீயம் தம் ரங்கேஶயம்) என்று இங்குத்தையில் ஸௌலப்ய ப்ர ஸித்தியைச் சொல்லுகிறதாகவுமாம்.

"பரவாஸுதேவம்" என்கையாலே - வ்யூஹவாஸுதேவரில் வ்யாவ்ருத்தி சொல்லுகிறது. 4"**आत्मानं वासुदेवाख्यं चिन्तयन्मधुसूदनः**"

† திருமாலை-11. § பெரியாழ்திரு 4-10. ‡ திருவாய் 3-5-5.
i திருவாய்3-6-9. || திருவாய் 8-5-7. / திருமாலை-36. c திருமாலை-2.

(ஆத்மாநம்வாஸுதேவாக்யம் சிந்தயந் மதுஸூதந:" என்னும்படி, ‡ "இவள் திறத்தென் சிந்தித்தாயே" என்றும், † "உறங்குவான் போல் யோகுசெய்த பெருமானை" என்றும் வ்யூஹஸௌஹார்த்தமு முண்டிறே-இங்கு; இவர் பரிபூர்ணாநுபவம் பண்ணும் பரவிஷய மாகவே பெரியபெருமாளை ப்ரீதிபண்ணியிருப்பாராய்த்து. "5 **कावेरी विरजा सेयं वैकुण्ठं रङ्गमन्दिरम्। स वासुदेवो रङ्गेशः प्रत्यक्षं परमं पदम्॥** (காவேரீவிரஜாஸேயம் வைகுண்டம் ரங்கமந்திரம் | ஸவாஸுதேவோ ரங்கேஶ: ப்ரத்யக்ஷம் பரமம்பதம்) என்னக்கடவதிறே.

/ "அண்டர்கோனணியரங்கன்" என்றும், || "வடிவுடை வானோர் தலைவனே யென்னும் வண்திருவரங்கனே" என்றும், § "பொங்கோதஞ்சூழ்ந்த புவனியும் விண்ணுலகு மங்காதும் சோராமேயாள்கின்றவெம்பெருமான் செங்கோலுடைய திருவரங்கச்செல்வனார்" என்றும் அடியறிவார் அநுஸந்தித்தார்கள். விசேஷித்து, கோயில் திருத்வாதஶாக்ஷரிப்ரதாநமாயிறே திருவாராதநம் கொண்டருளுவது. 6. "**द्वादशाक्षरमन्त्रोयं मन्त्राणां त्राय उच्यते**" (த்வாதஶாக்ஷர மந்த்ரோயம் மந்த்ராணாம்த்ராய உச்யதே) என்கிறபடியே 7. "**श्रीरङ्गनाथ जगन्नाथ**" (ஸ்ரீரங்கநாத ஜகந்நாத) என்னும்படி அர்ச்யரான இவரும் ஸர்வர்க்கும் ராஜாவாயிருப்பர்; இங்கும் (ராஜவதர்ஹணீயப) என்றதிறே. ஆகையாலே, ராஜாக்களைப் பள்ளியுணர்த்துமாபோலே அந்த ராஜாக்களுக்கும் ராஜாவான ஸ்ரீரங்கராஜரைத் திருப்பள்ளியுணர்த்தினபடி சொல்லுகிறது.

(ப்ராபோதிகீம் — ஸூக்திமாலாம்-ப: அக்ருத தம்-பகவந்தம்-பக்தாங்க்ரிரேணும்-ஈடே) என்கிறது-அங்குத்தைக்கு அநுரூபமாயிருப்பதாய் ச்ராவ்யமாய் திருப்பள்ளியுணர்த்துமதான பாமாலையை யாதொருத்தர் பணித்தார், அப்படிப்பட்ட வைபவத்தையுடையராய் ஜ்ஞாநாதிகுணபூர்ணரான தொண்டரடிப்பொடி யாழ்வாரைத் துதித்துத் தொழுகிறேனென்கிறது. (ஈடே) என்கிறஶப்தம் இரண்டையும் வசிக்கக்கடவது.

ராஜவதர்ஹணீயனாகையாலே—ராஜவதுபசாரமாப்படி திருப்பள்ளியுணர்த்தவேணுமிறே. c "அயோத்தியெம்மரசே அரங்கத்தம்மா பள்ளியெழுந்தருளாயே" என்றிறே இவர் திருப்பள்ளி

---

‡ திருவாய் 7-2-4. † திருவாய் 5-4-11. / அமல-10.
|| திருவாய்7-2-10. § நாச்-திரு 11-3. c திருப்பள்ளி-4.

யுணர்த்துவது. 8. "श्रीमता राजराजेन" (ஸ்ரீமதா ராஜராஜேந) 9. "राजाधिराजस्सर्वेषां" (ராஜாதிராஜஸ்ஸர்வேஷாம்) என்னும்படியான பெருமாளை, 10. "वीर सौम्य विबुद्ध्यस्व कौसल्यानन्दवर्धन" (வீரஸௌம்ய விபுத்யஸ்வ கௌஸல்யா நந்தவர்தந) 11. "कौसल्यासुप्रजा राम पूर्वा सन्ध्या प्रवर्तते। उत्तिष्ठ नरशार्दूल कर्तव्यं दैवमाह्निकम्॥" (கௌஸல்யாஸுப்ரஜா ராம பூர்வா ஸந்த்யா ப்ரவர்த்ததே। உத்திஷ்ட்ட நரஶார்தூல கர்த்தவ்யம் தைவமாஹ்நிகம்॥) என்று வங்கிகள் உணர்த்துமாபோலே அவர்க்குமபெரிய பெருமாளாய்ப் பெரியபெருமாளான ஸ்ரீரங்கராஜரையிறே இவர் திருப்பள்ளியுணர்த்துவது. இவர்தாம் இப்ரபந்தத்திலே காலாதிக்ரமமானபடியையும், ப்ரஹ்மாதிதேவதைகள் ஸாவதாநராய் வந்து திருவாசலிலே காத்துநிற்கிறபடியையும், அங்குத்தையில் ஸம்மர்த்தத்தையும், திருப்பள்ளியுணர்ந்தால் கண்டருளும்படி மங்களவஸ்துக்கள் பாரித்தபடியையும், மங்களவாத்யங்கள் முழங்குகிறபடியையும், மங்களதீபம் போலே ஆதித்யனுதித்துத் தோற்ற, அதில் அரவிந்தங்கள் தீபிகைபோலே விகஸித்தபடியையும் சொல்லியிறே திருப்பள்ளியுணர்த்துகிறது. இவையெல்லாம் ராஜவதர்ஹணீயதைக்கு ஏற்கும்படியாயாய்த்ததிருப்பது.

(ரங்கேஶயம்-ப்ராபோதிகீம்-ஸூக்திமாலாம்-அக்ருத) என்கையாலே-அடிக்கடி, "அரங்கத்தம்மா பள்ளியெழுந்தருளாய்" என்றும், விசேஷித்து † "இலங்கையர்கோன் வழிபாடுசெய்கோயில் எம்பெருமான் பள்ளியெழுந்தருளாயே" என்றுமிறே அருளிச்செய்தது. (ப்ராபோதிகீம்-ஸூக்திமாலாம்) என்கையாலே-திருப்பள்ளியெழுச்சியாகிற சொன்மாலையையிறே இவர் சொல்லிற்று; திருமாலையும் ஸூக்திமாலையிறே. அதிலும் ‡ "என்னைநோக்கா தொழிவதே" § "அளியன்நம பையலென்னார்" என்றிறே ஆலோகநாலாபாதிகளை அபேக்ஷித்தது. அதில் || "கிடந்ததோர்கிடக்கை" என்று கிடையழகை யநுபவித்து, நடையழகு தொடக்கமானவற்றைக் கண்டு அநுபவிக்கத் * துயிலெழப்பாடுகிறார். இரண்டும் பெரிய பெருமாளை ப்ரதிபாதித்த ப்ரபந்தமிறே; ஆகையால் (ஸூக்திமாலாம்) என்றதிலே இரண்டும் அந்தர்ப்பூதம்.

(பகவந்தம்) என்கையாலே—ஜ்ஞாநாதிகளைச்சொல்லி, ஜ்ஞாநபலம் ததீயஶேஷத்வமென்றது தோற்ற, (பக்தாங்க்ரிரேணும்) என்

---

† திருப்பள்ளி-5. ‡ திருமாலை-37. § ஷை-23. || ஷ.

கிறது. அவரும் / ''அடியார்க்காட்படுத்தாய்'' என்றும், || ''துளபதொண்டாய தொல்சீர்த் தொண்டரடிப்பொடி'' என்றுமிறே தலைக்கட்டிற்று. §''தொடையொத்த துளபமும் கூடையும் பொலிந்து தோன்றியதோள் தொண்டரடிப்பொடி'' என்று திருப்பள்ளியுணர்த்தி, * சூட்டு நன்மாலையிற்படியே-பாகவதமுகோல்லாஸஹேதுவான பகவத்கைங்கர்யத்தை ப்ரார்த்தித்தார்-அவர். (ஈடே) என்று-இதில் அவர் விஷயத்தில் வாசிக்காயிகரூப கைங்கர்யத்தைச் சொல்லித் தலைக்கட்டுகிறது.

திருவரங்கப் பெருமாளரையர் அருளிச்செய்தது

மண்டங் குடியென்பர் யாமறையோர் மன்னியசீர்த்
தொண்ட ரடிப்பொடி தொன்னகரம்—வண்டு
திணர்த்தவயல் தென்னரங்கத் தம்மானைப் பள்ளி
யுணர்த்தும் பிரானுதித்த வூர்.

பதவுரை:—வண்டு—வண்டுகளானவை, திணர்த்த—நெருங்கிப் படிந்திருக்கப் பெற்ற, வயல்—கழனிகள் சூழ்ந்த, தென்—அழகிய, அரங்கத்து—திருவரங்கத்தில்(கண்வளர்ந்தருள்கிற), அம்மானை—பெரிய பெருமாளை, பள்ளி உணர்த்தும்—திருப்பள்ளி யுணர்த்துமவராய், பிரான்—பரமோபகாரகராய், தொண்டரடிப்பொடி—''தொண்டரடிப் பொடி'' என்னுந் திருநாமமுடையரான ஆழ்வார், உதித்த ஊர்—திருவவதரித்த திவ்ய தேசமாவது; மா மறையோர்—சிறந்த வைதிகர்கள், மன்னிய—பொருந்தி வாழத்தகுந்த, சீர்—சீர்மையையுடைய, மண்டங்குடி—திருமண்டங்குடி என்கிற, தொல் நகரம்—அநாதியான நகரமாகும், என்பர்—என்று பெரியோர் கூறுவர்.

அவ:—(மண்டங்குடியித்யாதி) ஶேஷத்வ ஸீமாபூமியான தொண்டரடிப்பொடியாழ்வார் திருவவதார ஸ்தலம் * மிக்கவேதியராலே ஸதா அநுஸந்திக்கப்படுமென்கிறது.

வ்யா:— [மாமறையோர்-வண்டுதிணர்த்தவயல் தென்னரங்கத் தம்மானைப் பள்ளியுணர்த்தும்பிரான்-தொண்டரடிப்பொடி-உதித்த வூர்-தொல்நகரமான-மண்டங்குடியென்பர்] ''கண்ணங்குடி, குறுங்குடி, புள்ளம் பூதங்குடி'' என்று உகந்தருளின நிலங்களைச் சொல்லுமாபோலே, இங்கும் ''மண்டங்குடியென்பர் மாமறையோர்'' என்கிறது. இவர் மாமறையோராகையாலே மண்டங்குடியைச் சொல்லு

/ திருப்பள்ளி-10. || திருமாலை 45.

மவர்களும் மாமறையோராய்த்து. * மாமறையோராகிறார் — மிக்க வேதியர் வேதத்தினுட்பொருளான ததீயவைபவத்தை அறிந்தவர்கள்;

அதுதான் தொண்டரடிப்பொடி தொல்நகரமிறே. (தொல் நகரம்) பழயதாய்ப்போருகிற நகரம். நகரங்களிலேயிறே நல்ல வஸ்துக்களுண்டாவது; † "நல்லார் நவில்குருகூர்" என்னுமாபோ இது நகரமாகைக்கு ஹேது சொல்லுகிறது (வண்டுதிணர்த்த வித்யாதியால்). வண்டுகள் நெருங்கின வயலையுடைய. || "வயலுளிரிந்தன சுரும்பினம்" என்றருளிச்செய்தாரிறே. § "பூங்குவளைப் போதில் பொறிவண்டுகண்படுப்ப" இப்படி நீர்ப்பூவிலே வண்டுகள் நெருங்கின வயல்சூழ்ந்த கோயிலுக்கு நிர்வாஹகராண பெரிய பெருமாளை.

"வண்டுதிணர்த்த வயல்தென்னரங்கத் தம்மானைப்பள்ளியுணர்த்தும்" என்கையாலே §"வயலுளிரிந்தன சுரும்பினம்" இத்யாதிப்படியே
12. "मञ्जरीसुप्तभृङ्गा" (மஞ்ஜரீஸுப்தப்ருங்கா) என்று பூக்களிலே கண்படுத்த வண்டுகள் உணர்ந்தன. ஸ்ரீரங்கநாய்ச்சியார் ஸ்தநஸ்தபகத்திலே கண்வளர்ந்தருளுகிற ஸ்ரீரங்கராஜப்ருங்கத்தை, "அரங்கத்தம்மா பள்ளியெழுந்தருளாயே" என்று திருப்பள்ளியுணர்த்துமவர் (பள்ளியுணர்த்தும்பிரான்) திருப்பள்ளியுணர்த்தி, பின்புள்ளார்க்கும் இப்ரபந்தத்தையுண்டாக்கி உபகரித்தருளினவர்.

(உதித்தவூர்) * அறிவிலா மனிசர்க்கு * அறியாதனவறிவித்து அஜ்ஞாநத்தைப் போக்குகைக்காக இவர் அவ்வூரிலே உதித்தது. "கதிரவன் குணத்திசைச்சிகரம் வந்தணைந்தான் கனவிருளகன்றது" என்னும்படியன்றிக்கே ஆந்தரமான அந்தகாரத்தைப் போக்கிற்று. * ஆகையால், தொண்டரடிப்பொடி தொன்னகரம் மண்டங்குடியென்பர்.

பிள்ளைலோகம் ஜீயரருளிச்செய்த
திருப்பள்ளியெழுச்சித் தனியன் வ்யாக்யானம் முற்றிற்று
பிள்ளைலோகம் ஜீயர் திருவடிகளே சரணம்.

---

† திருவிரு-100. || திருப்பள்ளி4. § திருப்பாவை-3.

ஸ்ரீமதேராமாநுஜாயநம:

நஞ்ஜீயர் அருளிச்செய்த

திருப்பள்ளியெழுச்சி வ்யாக்யாநம்

அவதாரிகை

1. "**अनादिमायया सुप्तो यदा जीवः प्रबुद्ध्यते**" (அநாதிமாயயா ஸுப்தோ யதா ஜீவ: ப்ரபுத்யதே) என்கிறபடியே—அநாதிகாலம் அஜ்ஞாநத்தாலே உறங்குகிற இவரைப் பெரியபெருமாள் தம்முடைய நிரவதிக க்ருபையாலே உணர்த்தியருள உணர்ந்து, பெரியபெருமாளே ப்ராப்யரும் ப்ராபகருமென்னுமிடம் § "ஐம்புலனகத்தடக்கிக் காம்பறத்தலை சிரைத்துன் கடைத்தலை யிருந்துவாழும் சோம்பரையுகத்தி" என்று இவரையிட்டு நிலை

ஸ்ரீமதேராமாநுஜாயநம:

பெரியவாச்சான்பிள்ளை அருளிச்செய்த

திருப்பள்ளியெழுச்சி வ்யாக்யாநம்

அவதாரிகை

அவ:-இவ்வாழ்வாராகிறார்-முதலிலே ஸ்வரூபோபாயபுருஷார்த்த விவேக ஶூந்யராய், தேஹத்தில் ஆத்மபுத்தியைப் பண்ணி, தததுபந்திகளான ஶப்தாதி விஷயங்களிலே மண்டி, தம்மோடு சேர்ந்தாரையும் தத்ஸ்வபாவராக்கிப் போராநிற்க, † "மாதரார்கயற்கணென்னும் வலையுள் பட்டழுந்துவேனைப் போதரே யென்று சொல்லிப் புந்தியிற் புகுந்து தன்பாலாதரம் பெருகவைத்த வழகன்" என்கிறபடியே பெரியபெருமாள் தம் நிர்ஹேதுகக்ருபையாலே தம்வடிவழகைக் காட்டி, விஷயாந்தர ப்ராவண்யத்தை மாற்றி, ஸ்வரூபாநுரூபமாகத் தம்பக்கலிலே அபிநிவேஶத்தைப் பிறப்பிக்க, இவரும் ப்ரீதிகாரிதமான கைங்கர்யத்தைப் பாரித்துக் கொண்டு, பெரியபெருமாள் திருவடிகளிலே சென்றவிடத்திலே திருக்கண்களாலே குளிரநோக்குதல், கையைநீட்டி அணைத்தல், குஶல ப்ரச்நம் பண்

ஸ்ரீமதேராமாநுஜாயநம:

திருப்பள்ளியெழுச்சியின் பெரியவாச்சான்பிள்ளை வ்யாக்யாந அரும்பதவுரை

ப்ரவேச:—அவர் அநுகூலரானபின்பு உறங்குகிறரென்கைக்கு முன்பு உறக்கமில்லையோவென்ன வருளிச்செய்கிறர் (மாதராரித்யாதி).

---

§ திருமாலை-38. † திருமாலை-16.

யிடுவித்து, இப்ரபந்தத்தாலே நாட்டுக்கு வெளிச்செறிப்பைப் பண்ணி வைத்து நிர்ப்பரராய்க் கண்வளர்ந்தருள, அத்தலையித்தலையாய்ப் பெரிய பெருமாளையுணர்த்தி அடிமைசெய்யப் பாரிக்கிறார்.

ணுதல் 1. "शिरसा देवः प्रतिगृह्णाति"(ஶிரஸா தேவ: ப்ரதிக்ருஹ்ணாதி) என்கிறபடியே, * சூட்டுநன்மாலைகளை ஶிரஸா வஹித்தல் செய்யாதே பள்ளிகொண்டருளினா பெரிய பெருமாள்.

அதற்கு நிபந்தநம் அநாதரமென்ன வொண்ணாது-ப்ரியபூதராகையாலே. உண்டது அருளமையாலேயாதல், தமோபிபவத்தாலேயாதலென்னவொண்ணாது; ஶுத்தஸத்வமாகையாலே. பின்பு இதற்கு நிபந்தநமென்னென்னில்; a"ஆதலால் பிறவிவேண்டேன்" என்னும்படி ப்ரக்ருதிஸம்பந்தம் அப்ராப்தமென்னும்படியான ஜ்ஞாநவிசேஷத்தையுடையரான படியையும், ‡ "போனகஞ் செய்த சேடந்தருவரேல் புனிதம்" என்னும்படி ததீயஶேஷத்வ பர்யந்தமாக ஸ்வரூபயாதாத்ம்யஜ்ஞாநம் பிறந்தபடியையும் † "இச்சுவைதவிர - அச்சுவைபெறினும் வேண்டேன்" என்னும்படி ப்ரக்ருதி புருஷயாதாத்ம்ய ஜ்ஞாநம் பிறந்தபடியையும், || "காவலிற்புலனை வைத்து" என்னும்படி இந்த்ரியங்களை நியமித்தபடியையும், / "குளித்து மூன்றனலையோம்புங் குறிகொளந்தணமை தன்னை யொளித்திட்டேன்" என்னும்படி உபாயாந்தரங்களில் b துவக்கற்ற படியையும் § "உன்னருளென்னுமாசைதனால் பொய்யனேன் வந்துநின்றேன்" என்னும்படி உபாய யாதாத்ம்ய ஜ்ஞாநம் பிறந்தபடியையுமநுஸந்தித்து, i "சோம்பரையுகத்தி போலும்" என்கிறபடியே இவரையிப்படிப் பெறுவோமென்கிற ப்ரீதிப்ரகர்ஷத்தாலும், 2. "आत्मानं वासुदेवाख्यं चिन्तयन्" (ஆத்மாநம் வாஸுதேவாக்யம் சிந்தயந்) என்கிறபடியே இவரைப் புகுரநிறுத்தின தன் வைபவத்தையுமநுஸந்தித்து, c "நாகமிசைத்துயில்வான் போலுலகெல்லாம் நன்கொடுக்க யோகணைவான்" என்கிறபடியே- "எல்லாரையும் இவரைப்போலே நம்பக்கலிலே ப்ரவணராக்கும் விரகேதோ!" என்று ததேகாக்ரசித்தராய்க் கொண்டு பள்ளிகொண்டருளினார்.

---

a திருமாலை-3. ‡ திருமாலை-41. † திருமாலை-2. || திருமாலை-1. / திருமாலை-25. b (பா)தொற்றற்ற § திருமாலை-33. i திருமாலை-38. c திருவாய்4-8-9.

ப்ராப்ய ப்ராபகங்களிரண்டுமவனே யென்றறுதியிட்டால் பின்பு திருப்பள்ளியுணரும் படியையும், அழகோலக்க மிருக்கும்படியையும், அருகே திருமாலையெடுத்து அடிமைசெய்யும் படியையும் மநோரதித்து, இவையே யாத்ரையாய்ச் செல்லுமித்தனையிறே. நாய்ச்சியாருக்கு § "மாரிமலைமுழஞ்சில்" என்கிற பாட்டிலே இதுவேயிறே அநுஸந்தாநம்; நம்மாழ்வாரும், *நெடுமாற்கடிமையிலே புருஷார்த்தத்தினுடைய சரமாவதியை நிலையிட்டு, அநந்தரம் *கொண்ட பெண்டிரிலே நாட்டுக்கு வேண்டும் ஹிதமருளிச்செய்து பின்பு ¶ "கிடந்த நாள் கிடந்தாய்" என்கிற பாட்டிலே உணர்த்தியெழுப்பி அடிமை செய்யப் பாரித்தாரிறே.

விச்வாமித்திரனும், 2. **कौसल्यासुप्रजा राम पूर्वा सन्ध्या प्रवर्तते। उत्तिष्ठ नरशार्दूल कर्तव्यं दैवमाह्निकम्॥**" (கௌஸல்யாஸுப்ரஜா ராம பூர்வா ஸந்த்யா ப்ரவர்த்ததே। உத்திஷ்ட நரஶார்தூல கர்த்தவ்யம் தைவ மாஹ்நிகம் ॥) என்றுனிறே; அப்படியே இவரும் பெரியபெருமாள் உணர்ந்

---

i "மாதரார் கயற்கணென்னும் வலையுட்பட்டு" என்கிறபடியே இந்த்ரியவச்யராய்க்கைகழிந்தவன்று, 3. "**अनिद्रस्सततं रामः**" (அநித்ரஸ்ஸததம் ராம:) என்கிறபடியே-உறங்காதிருந்த பெரியபெருமாள், † "அடியரோர்க்ககலலாமே" என்னும்படி கைபுகுந்தபின்பு, கரைச்சல்கெட்டு மார்பிலே கைவைத்து உறங்கப்புக்கார். ‡ "எம்பிராற்காட்செய்யாதே யென்செய்வான் தோன்றினேனே" என்றிருக்குமவராகையாலே கைங்கர்யத்வரையாலே 4. "**उत्तिष्ठ नरशार्दूल**" (உத்திஷ்டநரஶார்த்தூல) 5. "**स मया बोधितः श्रीमान्**" (ஸ மயா போதித: ஸ்ரீமாந்) || "உம்பர் கோமானே யுறங்காதெழுந்திராய்" என்னுமா போலே "அரங்கத்தம்மா பள்ளியெழுந்தருளாயே" என்று திருப்பள்ளியுணர்த்தி, / "உனக்கே நாமாட்செய்வோம்" என்றாப்போலே "தொண்டரடிப்பொடி யென்னுமடியனை யளியனென்றருளி யுன்னடியார்க்காட்படுத்தாய்" என்று-ததீயபர்யந்தமான கைங்கர்யத்தைக் கொண்டருள வேணுமென்று ப்ரார்த்திக்கிறாராயிருக்கிறது.

ஆனால் எழுப்புவானென்னென்ன வருளிச்செய்கிறார் (எம்பிராற்கித்யாதி). ஆனாலும் நிர்ப்பந்தித்து எழுப்புகைக்கு நிபந்தநமேதென்ன சங்கா பூர்வகமாக அருளிச்செய்கிறார் (திருப்பள்ளியித்யாதி).

---

§ திருப்பா-23. ¶ திருவாய் 9-2-3. i திருமாலை-16. † திருமாலை-20. ‡ திருமாலை-28. || திருப்பா-17. / திருப்பா-29.

தருளும்போதையழகுகண்டு அடிமைசெய்ய ஆசைப்பட்டுத் திருப்பள்ளி யுணர்த்துகிறார்.

ஆதித்யன் உதயகிரியிலேவந்து தோற்றினான். திருவாராதநத்துக்கு ஸமுசிதமான ஸகலோபகரணங்களுங்கொண்டு துர்மாநிகளான தேவஜாதிகளும், ராஜாக்களும், பக்நாபிமாநராய்த் திருக்கண்ணோக்காகத் தெற்குதிக்

திருப்பள்ளியுணர்த்துகைக்கு நிபந்தநமென்னென்னில்;— || "ஆம்பரிசறிந்துகொண்டு" என்கிறபடியே-கைங்கர்யயாதாத்ம்ய மறியுமவராகையாலே, 6. "अहं सर्वं करिष्यामि जाग्रतः स्वपतश्च ते" (அஹம் ஸர்வம் கரிஷ்யாமி ஜாக்ரதஸ் ஸ்வபதச்ச தே) §"ஒழிவில் காலமெல்லாம் உடனாய்மன்னி" என்கிறபடியே-ஸர்வதேஶ ஸர்வகால ஸர்வாவஸ்தைகளிலும் ஸர்வவித கைங்கர்யத்தையும் பண்ணுமிடத்தில் † "தனக்கேயாக வெனைக்கொள்ளுமீதே" என்று அவனுகந்த கைங்கர்யமாக வேணும்; அதுசெய்யுமிடத்தில் 7. "क्रियतामिति मां वद" (க்ரியதாமிதி மாம்வத) என்றும் † "எனக்கேயாட்செய்" எனறும், ‡ "முகப்பேகூவிப் பணிகொள்ளாய்" என்றும், சொல்லுகிறபடியே— ஏவிக்கொள்ள வேணுமென்றிருக்குமவ ராகையாலே, ப்ரபாதஸூசகங்களைச் சொல்லித திருப்பள்ளி யுணர்த்துகிறார்.

திருமாலையில் திருப்பள்ளியெழுச்சிக்கு வாசியென்னென்னில்; * அநாதிமாயயா ஸுப்தரான இவரைப் பெரியபெருமாளுணர்த்தினார் அதில்; இவர்தம்பக்கல் வ்யாமோஹத்தாலே ஸுப்தரான அவரைத்திருப்பள்ளியுணர்த்துகிறார்-இதில்; / "புனைகவிதையேலுமெம்பிராற்கினியவாறே" என்று-வாசிக கைங்கர்யத்தை இனிதாகக்கைக்கொண்டபடி சொல்லிற்று-அதில். "தொடையொத்த துளபமும் கூடையும்பொலிந்து தோன்றியதோள் தொண்டரடிப்பொடியென்னு மடியனை யளியனென்றருளி" என்கையாலே காயிககைங்கர்யத்தை இனிதாகக் கைக்கொண்டருளவேணுமெனகிறது இதில். / "எம்பிராற்கினியவாறே" என்று பெரியபெருமாளுக்கினிதான கைங்கர்யத்தைப்பெற்றுநின்றார்—அதில்; "அடியார்க்காட்படுத்தாய்" என்று-ததீயருகந்த கைங்கர்யத்தை அபேக்ஷிக்கிறார்-இதில். அதில் பெரியபெருமாளுடைய க்ருஷியைச் சோல்லிற்று; இதில் அவருடைய க்ருஷிபலித்தபடியைச்சொல்லுகிறது. c "எளியதோராருளு

|| திருமாலை-38. § திருவாய் 3-3-1. † திருவாய் 2-9-4.
‡ திருவாய் 8-5-7. / திருமாலை-45. c திருமாலை-37.

1. கதிரவன்குணதிசைச் சிகரம்வந்தணைந்தான்
   கனவிருளகன்றது காலையம்பொழுதாய்
மதுவிரிந்தொழுகின மாமலரெல்லாம்
   வானவரரசர்கள் வந்துவந்தீண்டி
எதிர்திசைநிறைந்தன ரிவரொடும்புகுந்த
   இருங்களிற்றீட்டமும் பிடியொடுமுரசும்
அதிர்தலிலலைகடல் போன்றுளதெங்கும்
   அரங்கத்தம்மா பள்ளியெழுந்தருளாயே.

பதவுரை:— அரங்கத்து அம்மா — திருவரங்கத்தில் பள்ளிகொண்டருளும் ஸ்வாமியே! கதிரவன் — ஸூர்யனானவன், குணதிசை— கிழக்குத் திக்கிலே, சிகரம்—(உதயகிரியின்)உச்சியிலே, வந்து அணைந்தான்—வந்து கூடினான்; கன இருள்—(இரவின) மிகுந்திருந்த இருளானது, அகன்றது—நீங்கியொழிந்தது; அம்— அழகிய, காலைப் போழுது ஆய்--காலைப் பொழுது வர, மா மலர் எல்லாம் — சிறந்த புஷ்பங்களெல்லாம், விரிந்து—மலர்ச்சிபெற்று, மது ஒழுகின—தேன் பெருக்குகின்றன; வானவர்—தேவர்களும், அரசர்கள்—ராஜாக்களும், வந்து வந்து—ஒருவர்க்கொருவர் முற்கோலி வந்து, ஈண்டி—திரண்டு, எதிர் திசை—திருக்கண்ணுக்கு விஷயமான தெற்குத்திக்கிலே, நிறைந்தனர்—நிறைந்து நின்றார்கள்; இவரோடும் புகுந்த—இவர்களோடு கூடவந்த (இவர்களது வாஹநமாகிய) இரு களிறு ஈட்டமும்—பெரிய ஆண்யானைத் திரள்களும், பிடியோடு—பெண்யானைத் திரள்களும்,

---

கிலே ப்ரதமகடாக்ஷத்துக்காக "நான்முற்பட்டேன், நான்முற்பட்டேன்" என்று முற்கோலிக் கொண்டுவந்து நின்றார்கள்; ஸர்வரக்ஷகராய் ஸ்ரிய:பதியாய் ஆச்ரித வத்ஸலராய் ஸர்வஸமாச்ரயணீயரான தேவரீர் அடியேனுக்காக உணர்ந்தருளினீரென்கிற தரத்தை அடியேனுக்குத் தந்தருளித் திருப்பள்ளியுணர்ந்து அடியோங்களடிமை கொண்டருள வேணுமென்கிறார். ப்ரஜைகளைக்காட்டி ஜீவநம் வேண்டுவாரைப்போலே ஆராதகரான தேவஜாதியை முன்னிட்டுக்கொண்டு ஸ்வப்ரயோஜனத்தை அபேக்ஷிக்கிறார்.

மன்றேயென்திறத்து" என்று தம்மை விஷயீகரிக்க வேணுமென்றார் அதில்; "அவர்க்கு நாளோலக்கமருள" என்று பாஸுரத்தியை ஆபாஸிக்கும்படியாகப் பாசுரம் பிறந்தபடி சொல்லுகிறது இதில்.

முரசும்—பேரிவாத்யங்களும், அதிர்தலில்—சப்திக்கும்போது, எங்கும்—எத்திசையும், அலே—அலேயெறியாநின்ற, கடல் போன்று உளது—ஸமுத்ர கோஷத்தை ஒத்திருந்தது; (ஆதலால்)பள்ளி எழுந்தருளாய்—திருப்பள்ளியை விட்டு எழுந்திருக்கவேணும்.

அவ:—முதற்பாட்டு. 3. "यस्यावताररूपाणि नमस्यन्ति दिवौकसः" (யஸ்யாவதார ரூபாணி நமஸ்யந்தி திவௌகஸ:) என்னும்படியே ஆராதகரான தேவஜாதிகள் அவஸரப்ரதீக்ஷராய் வந்து நின்றூர்கள்; திருப்பள்ளியுணர்ந்தருளவேணும் என்கிறூர்.

வ்யா:—(கதிரவனித்யாதி). தன்னுடைய ஆயிரம் கிரணங்களாலும் ஜகத்திலந்தகாரத்தை நீக்கி வெளிச்செறிப்பைப் பண்ணவல்ல ஆதித்யனுன வன், கிழக்கிலே உதயகிரியிலே வந்து ஸங்கதனுனுன். அவனுக்கடுத்தாப் போலே கோயிலாய்த்துக்காணும்; திருவடிகளும் அத்திக்கிலேயாகப்பெற்

அவ:—முதற்பாட்டு. (கதிரவனித்யாதி) ஆதித்யனுனவன் தன் ஸ்வரூபஸித்திக்காக விளக்காய்வந்து தோற்றினுன்; அவனைக் குல ப்ரச்நம் பண்ணவேண்டாவோ வென்கிறூர். § "வெய்யகதிரோன் விளக்காக" என்றூரிறே.

"நாட்டையெல்லாமெழுப்புகிற ஆதித்யனுதித்தால் எங்களாதித்யனுதிக்கவேண்டாவோ? பாஹ்யமான அந்தகாரமிறே அவனுலே போக்கலாவது; ஆந்தரமான அந்தகாரம் போக்கும்போது தேவரீருணர்ந்தருளவேண்டாவோ? ஆதித்யன் உதயபர்வதத்தை வந்து அணையாநின்றுன்; இருள் நீங்காநின்றது; ஸமாராதநோபகரணமான திருப்படித்தாமங்கள் விகஸிதமாகாநின்றன; ஆராத்யர் தேவரீரென்று ஆராதிப்பாரெல்லாரும் தந்தாம் பரிகரங்களோடே வந்தார்கள், இத்தையெல்லாமுடைய தேவரீர் திருப்பள்ளியுணர்ந்தருளி விசேஷகடாக்ஷம் பண்ணியருள வேணுமென்கிறூர்.

வ்யா:—(கதிரவன் குணதிசைச் சிகரம் வந்தணைந்தான்) கண்வளர்ந்தருளுகிற தேவரீருக்கு ப்ராத:காலத்திலே ஸந்த்யா தீபங்கொண்டு வருவாரைப்போலே, திநகரனுனவன் தன் கிரணங்களெல்லாவற்றேடும் கீழ்திக்கில் உதயகிரியை வந்தணையா நின்றுன்.

---

§ முதல்திருவ-1.

றது; அடியிலும் முடியிலும் ஆதித்யர்கள் வந்துநிற்க, நடுவேகிடந்து கண் வளர்ந்தருளுகிறதென்? § "கதிராயிரமிரவிகலந்தெரித்தாலொத்த நீண்முடி" யிறே ¶ "மிக்கசெஞ்சுடர்ப்பரிதி" என்னக்கடவதிறே. (கனவிருளகன்றது) ராத்ரியில் மிக்க இருளானது ஸவாஸநமாகப்போய்த்து. (காலையம்பொழுதாய்) ஆராதகர் ஆராதநார்த்தமாக உத்யோகிக்கக்கடவ காலமாய்த்து. (மதுவிரிந்தொழுகின மாமலரெல்லாம்). உதயபலமாக ஆராதநோபகரணமான புஷ்பங்கள் விகஸிதமாய் மதுவெள்ளமிடா நின்றன.

(வானவரித்யாதி) துர்மாநிகளான தேவர்களும், ராஜாக்களும் பக்நாபிமாநராய், தந்தாமுடைய பலஸித்திக்கும் ஆபந்நிவ்ருத்திக்கு முடலாக ஒருவர்க்கொருவர் முற்கோலித் திரண்டனர். (எதிர்திசையித்யாதி) திருக்கண்ணுக்கான தெற்கு திக்கிலே விவரமறப் புகுந்துநின்றார்கள். (இவரொடும்

---

‡ "கதிரவரவரவர் கைநிரை காட்டினர்" / "நாரணன் தமரைக் கண்டுகந்து" என்ற—தேவரீருடையார் அர்ச்சிராதிகதியே போம் போது, ஆதிவாஹிகர் தந்தாம்பதங்கள் நிலைநிற்கைக்காக, தேவரீருடையார்க்குத்தரங்கொடுத்த விளக்குடையாரோபாதி; விளக்குப் பிடிக்கிறவர்கள் வருத்த விஷயத்தில் கிஞ்சித்கரியாதிரார்களிறே. கண்வளர்ந்தருளுகிற தேவரீர் திருப்பள்ளியுணர்ந்தருளுவதெப் போதோவென்று அவஸரப்ரதீக்ஷனாய், 8. "भीषोदेति सूर्यः" (பீஷோதேதி ஸூர்ய:) என்கிறபடியே கீழ்திக்கில் உதயகிரியிலே வந்து தோன்றினான். குன்றத்திட்டவிளக்காக உதயபர்வதத்தினருகே ஊரையும் சோலையையும் கண்வளர்ந்தருளுகிறபடியையும் காண்கையிலுண்டான ஆசைப்பாடு தோன்ற வந்துகொடுநின்றான்.

(கனவிருளகன்றது) ஆதித்யன் வரவுக்குத் தக்கபடியே-செறிந்த இருளானது குறையவாங்கிற்று. † "இருள் வீற்றிருந்தது பார் முழுதும்" என்கிறபடியே ராஜாஜ்ஞையை பங்கித்து வன்னியர் குறும்பு செய்யுமாபோலே ஸாம்ராஜ்யம் பண்ணிற்று. மதிப்பனை ராஜாஸபரிகரனாய் எடுத்துவிட்டவாறே ஒருபயணங் குறையவாங்குமாபோலே இருட்டும் ஒரு பயணம் குறைய வாங்கிற்று. (காலையம்பொழுதாய் மதுவிரிந் தொழுகின மாமலரெல்லாம்) இருட்டுப் போய்நின்றவளவிலே, 9. "ब्राह्मे मुहूर्ते चोत्थाय" (ப்ராஹ்மே

---

§ பெரியாழ்-திரு 4-1-1. ¶ திருவாசிரியம்-1. ‡ திருவாய் 10-9-4. / திருவாய் 10-9-2. † திருவிருத்தம்-13.

புகுந்தவித்யாதி) இவர்களேறும் வாஹனங்களான களிறுகளும் பிடிகளும் முரசினுடைய த்வநிகளுமாய்த் திரண்டு நெருங்கிநின்று த்வநிக்கிற த்வநி யானது அலையெறியாநின்ற ஸமுத்ரத்தின் கோஷம்போலே எங்கும் கோஷி யாநின்றது.

(அரங்கத்தம்மா பள்ளியெழுந்தருளாயே) உபயவிபூதிநாதத்வம் தோற்ற *செங்கோலுடைய திருவரங்கச் செல்வரான தேவரீர் அநந்யகதி

முஹூர்த்தே சோத்தாய) || "சிற்றஞ் சிறு காலே" என்கிறபடியே ஸமாராதநயோக்யமான அழகிய காலமாய், அக்காலத்திலே, தேசாந்தரம்போன பந்துக்கள் வாராநின்றார்களென்றறிந்தவாறே ஸ்வதேசத்திலிருந்த பந்துக்கள் முகமலருமாபோலே, இவ்வெயிற் கொழுந்து தாமரைப்பூக்களை வந்தணுவும்படியான காலவண்ணிமை யாலே பூக்கள் ஸ்மிதம் பண்ணிணவாறே, பூக்களினுடைய செறிவு நெகிழ, சித்ர(ச்சித்ர)ங்களாலே பூவில் தேன்களடைய ஒழுகாநின்றன. மாமலர்–பெரியமலர். "மாமலரெல்லாம்" என்கையாலே....புஷ்ப ஜாதிக்கெல்லாம் முபலக்ஷணம். (மதுவிரிந்தொழுகின) மதுவெள்ள மிடாநின்றது.

(வானவரித்யாதி). ஆராதகரான தேவர்களும் ராஜாக்களும் தந்தாம் பதப்ரம்சம் வாராமைக்கு இதுவே யாத்ரையாக ஆராத்ய ரான தேவரீரைத் திருவடித் தொழுகையிலுண்டான த்வரையாலே முற்பட்டார் முற்பட்டபடி ஒருவரிருவராய் வந்து திரண்டு திக்குக ளெங்கும் நிறையப் புகுந்தார்கள். திருக்கண்ணோக்கிலும் அல்லாத திக்குகளெங்கும் நிறைந்தார்களென்னவுமாம்; தேவரீருடைய பரிகர மென்னில் இங்ஙனே யிருக்கவேண்டாவோ? (இவரொடுமித்யாதி) இவர்களுடனேவந்த பெரிய யானைத்திரள்களும் இனம்பிரியாத பிடிகளுமாய்; ஸ்ரீரங்கமிறே. வாத்யகோஷங்களும், இந்த ஸமுதாய மாக முழங்குகிற முழக்கமானது, உறங்குகிறபிள்ளைகளை யொரு வகைகளாலே யெழுப்புமாபோலே வாத்யகோஷங்களாலே திருப் பள்ளியுணரும்படி. (அதிர்தலில்)இப்படி கோஷிக்கையில். § "குமிறு மோசைவிழவொலி" என்னுமாபோலே இந்த ஸமுதாயகோஷமா னது சந்த்ரோதயத்தில் கடல்போலே கிளர்ந்தது; * பெரும்புறக்கட

|| திருப்பாவை-29. § திருவாய் 6-5-2.

2\. கொழுங்கொடிமுல்லையின் கொழுமலரணவிக்
கூர்ந்தது குணதிசை மாருதமிதுவோ
எழுந்தன மலரணைப் பள்ளிகொள்ளன்னம்
ஈன்பனிநனைந்த தமிருஞ் சிறகுதறி
விழுங்கியமுதலையின் பிலம்புரைபேழ்வாய்
வெள்ளெயிறுறவதன் விடத்தினுக்கனுங்கி
அழுங்கியவானையி னருந்துயர்கெடுத்த
அரங்கத்தம்மா! பள்ளியெழுந்தருளாயே.

பதவுரை:—குணதிசை மாருதம்—கிழக்குக் காற்றானது, கொழு கொடி—செழுமைதங்கிய கொடியையுடைத்தான, முல்லையின்—முல்லைச் செடியிலுண்டான, கொழு மலர்—அழகிய மலர்களை, அணவி—அளைந்து கொண்டு, இதுவோ—இதோ, கூர்ந்தது-மிகவும் வீசாநின்றது; மலர் அணை—பூம்பள்ளியில், பள்ளி கொள்—உறங்குகின்ற, அன்னம்—ஹம்ஸங்களானவை, ஈன் பனி நனைந்த—(மழை போலே) சொரிகிற பனியாலே நனைந்த, தம்—தங்களுடைய, இரு சிறகு—அழகிய இறக்கைகளை, உதறி—உதறிக்கொண்டு, எழுந்தன—உறக்கம் விட்டெழுந்தன; விழுங்கிய—(தன் காலை)விழுங்கின, முதலையின்—முதலையினுடைய, பிலம் புரை—பாழி போன்ற, பேழ்வாய்—

யான அடியேனுக்காகத் திருப்பள்ளியுணர்ந்தருளி அடிமை கொண்டருள வேணுமென்கிறார். ...

லான தேவரீர் உணரவேண்டாவோ? உபயவிபூதியுக்தரான தேவரீர் திருப்பள்ளி யுணர்ந்து இவர்களுக்கு முகம்கொடுத்தருளி, அடிமை கொண்டருள வேணுமென்று கருத்து.

அரு:—முதற்பாட்டு. (கதிரவனித்யாதி) ஆதித்யனுக்கு உதயாஸ்தமநம் ஸ்வபாவமன்றோ? நமக்குக் கிஞ்சித்கரிக்கைக்கென்கிற தெப்படியென்ன அருளிச்செய்கிறார் (கதிரவரவரவரித்யாதி). (தாம்) பஹுமாநம். (விளக்குடையார்) கைவிளக்குப்பிடிக்கிறவர்கள். (அண்ணிமை) ஸாமீப்யம்.

“எதிர்திசை” என்று முழுச்சொல்லாய், திக்குக்களெங்கு மென்னுதல்; ஆனைகள் பிடிகளோடே வருவானென்னென்ன வருளிச்செய்கிறார் (ஸ்ரீரங்கமிறேயென்று). பிராட்டியிருக்கிற ஸ்தலமாகையால் தாங்களும் பிடிகளோடே வருகின்றன வென்றபடி. “அரங்கத்தம்மா” என்றுஇங்குத்தைக்கு நிர்வாஹம்.

பெரியவாயிலுள்ள, வெள் எயிறு உற— வெளுத்த கோரப்பற்கள் ஊன்ற, அதன்—அம்முதலையினுடைய, விடத்தினுக்கு—பல் விஷத்திற்கு, அனுங்கி அழுங்கிய—மிகவும் நோவுபட்ட, ஆனையின்-கஜேந்திராழ்வானுடைய, அரு துயர்–பெரிய துக்கத்தை, கெடுத்த–போக்கியருளின, அரங்கதம்மா! பள்ளி எழுந்தருளாய்—

அவ;—இரண்டாம்பாட்டு. போதுவிடிந்தமைக் கடையாளமான கீழ்க்காற்றும் புஷ்பசாயிகளான அன்னங்களினுடைய ப்ரபோதநமுமுண்டாயிற்று; ஆச்ரிதவத்ஸலரான தேவரீர் திருப்பள்ளியுணர்ந்தருள வேணு மென்கிறார்.

வ்யா:-(கொழுங் கொடியித்யாதி) ச்ரத்தையை யுடைத்தான முல்லைச் செவ்வி மலரின் பரிமளத்தை யளைந்துகொண்டு விடிகாற்றானது "நீங்களுறங்குகிறதென்" என்று உணர்த்துவாரைப்போலே சூழ்ந்து கொண்டு முகங்களிலே அலையெறியா நின்றது. காலைப் பிடித்து உணர்த்துகிறபடி.

(எழுந்தன இத்யாதி) தாமரைப்பூவாகிற படுக்கையிலே பனியை மதியாதே படுக்கை வாய்ப்பாலே உறங்குகிற ஹம்ஸமிதுநங்களானவை கால்

அவ:—இரண்டாம்பாட்டு. (கொழுங்கொடியித்யாதி) முல்லையின் பரிமளத்தை முகந்து கொண்டு கீழ்காற்று வந்து, தாமரைப் பூவில் கிடந்துறங்குகிற ஹம்ஸமிதுனங்களைக் கிளப்பிற்றின; ஸ்ரீ கஜேந்த்ராழ்வானுடைய விரோதியையறுக்க அரைகுலையத் தலைகுலையவந்து ரக்ஷித்தருளின தேவரீர் கண்வளர்ந்தருளுகிறதென்? திருப்பள்ளி யுணர்ந்தருள வேணு மென்கிறார்.

வ்யா:—(கொழுங்கொடியித்யாதி) ஸச்ரத்தமான முல்லையினுடைய ஸச்ரத்தமான பூவையணவி. அல்லியுந்தாதும் அரும்புமான கந்தல்படாமே அருமிதியான மணத்தை வாங்கிக் கொண்டு §"புதுமாதவிமீதணவி" என்னுமாபோலே கீழ்த்திக்கில் காற்றானது, கூர்ந்தது-விஞ்சிற்று. கூருகையாவது-மிகுகை.

ஆதித்யனுக்கு நேரே உறவான தாமரைப் பூவினுடைய விகாஸமேயன்றியே நிலத்தில் பூவான முல்லைப்பூவும் விகஸித்து, அதின் மணத்தைக் கொண்டு தேவரீரைத் திருப்பள்ளி யுணர்த்துமாபோலே

---

§ திருவாய் 5-9-2.

முணர்த்த உணர்ந்தன. இத்தால்-*அருமறை பயந்தவன்னத்தோடு ஸஜாதீயமான அன்னமெழுந்தன, நீயுமெழுந்திராயென்றபடி. (தமிருஞ்சிறகித்யாதி) பனியிலே நனைந்த சிறகுகளை உதறிநின்றது.

(விழுங்கியவித்யாதி) 4. "परमापदमापन्नः" (பரமாபதமாபந்ந:) என்று ஸ்வசக்தி மாளும்படி, பிலத்வாரமென்று சொல்லலாம்படியிருக்கிற பெரிய பரப்பையுடைய முதலைவாயிலே அகப்பட்டு, அதினெயிற்றாலே நெருக்குண்டு மிகவும் நோவுபட்டு, துதிக்கை முழுகும்படியான தசையிலே

வந்து கொடுநின்றது. "இதுவோ" என்றது-ராஜாக்களுக்கு அந்தரங்கரானவர்கள் வந்தவர்களைக் காட்டுமாபோலே பார்த்தருளீரென்கிறார். ஸ்பர்சேந்த்ரியக்ராஹ்யமானதை "இதுவோ" என்கையாலே-காற்று ஸததகதித்வம் தவிர்ந்து நின்றாப்போலே யிருக்கிறது.

(எழுந்தன மலரணைபித்யாதி) இக்காற்று வீசினவாறே விடிந்ததாகாதேயென்று மலராநிற்கிற படுக்கையிலே பள்ளி கொள்ளுகிற ஹம்ஸமிதுநங்களுணர்ந்தன. "பள்ளிகொள்" என்கிறது, உகந்தருளின நிலத்திலே யுள்ளவையாகையாலே உபசாரமாகவல்லது சொல்லாரிறே. "நம்மில் சிறியாரில்லை இங்கு வர்த்திப்பாரில்" என்றிருப்பார்களே. பூம்படுக்கையாலே—தனிப்படுக்கை தணலோடொக்குமாகையாலே மிதுநமாயல்லது ஶயியாமை தோற்றுகிறது; *மென்மலர்ப்பள்ளி வெம்பள்ளியாமே. (ஈன்பனிநனைந்த) உண்டான பனியாலே நனைந்தென்னுதல்; சொரிகிற பனியென்னுதல். §"ஒழுகுநுண் பனிக்கொடுங்கிய" இத்யாதி. (இருஞ்சிறகுதறி) பெரிய சிறகுகளையுதறிக் கொண்டு. பேடையைச் சிறகுக்குள்ளே வளர்த்திகதன் சிறகையிட்டுக் கவித்துக் கொண்டாய்த்துக் கிடப்பது. நாடோடியான அன்னங்களெல்லாமுணர்ந்தன, அன்னமாயன்றங்கருமறை பயந்த தேவரீர் திருப்பள்ளியுணரவேண்டாவோ?.

(விழுங்கிய வித்யாதி) முதலையின் கையிலே யானை அகப்பட்டதென்றாலோ தேவரீர் அரைகுலையத் தலைகுலையப் புறப்படலாவது. காலிலே முதலைகடிக்க "விழுங்கிய" என்கிறார்-பசல்கள் கிணற்றி†னருகே போயிற்றெனறால்"இனிவிழுந்தேன்"என்பாரைப்போலே. (பிலம்புரை பேழ்வாய்) ‡பிலத்வாரத்தோடொத்திருக்கிற பெரிய

---

§ பெரியதிரு 8-5-8 †(பா)ல் விழுந்ததென்றால். ‡(பா) பாதாள.

பெரிய ஆபத்தைத் தீர்த்து, §''கைம்மா துன்பம் கடிந்தபிரான்'' என்று உபகார ஸ்ம்ருதியாலே க்ருதஜ்ஞர் ஈடுபடும்படியான கையில் பூவின்செவ்வியழியாமே திருவடிகளிலே இடுவித்துக்கொண்டு அவனையடிமைகொண்ட மஹோபகாரகராய், பிற்பாடர்க்கு உதவுகைக்காகக்கோயிலிலே நித்ய ஸந்நிதி பண்ணுகிற தேவரீருணர்ந்தருளும் போதையழகுகாண ஆசைப்பட்ட அடியோங்களுடைய ஆர்த்தியெல்லாம் தீரும்படி யுணர்ந்தருள வேணுமென்கிறார்.

அவ:—மூன்றாம்பாட்டு. நக்ஷத்ராதிகள் ஒளிமழுங்கும்படி ஆதித்யனுதித்தான்; கையுந் திருவாழியுமான அழகை அநுபவிக்கும்படி திருப்பள்ளியுணர்ந்தருள வேணுமென்கிறார்.

வாயின். (வெள்ளெயிறுற) அங்கு ஆமிஷமில்லாமையாலே மணலையிறே பக்ஷிப்பது; ஆகையாலே சாணையிலிட்ட ஶஸ்த்ரம் போலே காணுமிருப்பது. (அதன் விடத்தினுக்கனுங்கி யழுங்கிய வானையினருந்துயர் கெடுத்த) ஆனையினுடைய காலைப் பற்றின முதலையினுடைய பல்லின் விஷத்தாலேயனுங்கி நோவுபட்ட ஆனையுடைய. (அழுங்கிய) நோவுபட்ட, (அருந்துயர் கெடுத்த) 10 ''अतन्द्रितचमूपतिप्रहितहस्तम्'' (அதந்த்ரிதசமூபதி ப்ரஹிதஹஸ்தம்) இத்யாதி. (அருந்துயர்) இனி அவ்வருகில்லை யென்னும்படியான க்லேஶமென்னவுமாம்; பெறுதற்கரிய துயரென்றுமாம். ஸர்வேச்வரனை வந்து விழப்பண்ணின நோவிறே. (அரங்கத்தம்மா இத்யாதி) இப்படி ஆர்த்தரானார் கூக்குரல் கேட்கிற இடத்திலே உறங்குமத்தனையோ? ஒரு முதலை பிடித்தாலோ உதவலாவது? ஸம்ஸாரமாகிற பெருங்கடலிலே ஆழ விழுந்து இந்த்ரியங்களாகிற முதலைகள் ஐந்தின் வாயிலே விழுந்து அகப்பட்டாரை உணர்ந்தருளி ரக்ஷிக்க வேண்டாவோ? ....

அரு:—இரண்டாம்பாட்டு. (கொழுங்கொடியித்யாதி) (கந்தல்) கல்மஷம்; அன்னமென்னுமிற்கமிதுனத்துக்கு வாசகமெங்ஙனேயென்ன வருளிச்செய்கிறார் (பூம்படுக்கையித்யாதி). பனிசொரியுமோவென்ன அருளிச்செய்கிறார் (ஒழுகுநுண்பனி)என்று. (அனுக்கம்) நோவு; (அழுங்கிய) அழுந்திய. நோவிலே அழுந்தினவென்றபடி. துக்கத்தைப் போக்கினனே வென்ன அருளிச்செய்கிறார் (அதந்த்ரிதேத்யாதி).

---

§ ''திருவாய் 2-9-1.

3. சுடரொளி பரந்தன சூழ்திசை யெல்லாம்
துன்னிய தாரகை மின்னொளி சுருங்கிப்
படரொளி பசுத்தனன் பனிமதி யிவனோ
பாயிரு ளகன்றது பைம்பொழிற் கமுகின்
மடலிடைக் கீறிவண் பாளைகள் நாற
வைகறை கூர்ந்தது மாருத மிதுவோ
அடலொளி திகழ்தரு திகிரியந் தடக்கை
அரங்கத்தம்மா பள்ளியெழுந்தருளாயே.

பதவுரை:—சூழ் திசை எல்லாம்—கண்ட விடமெங்கும், சுடர் ஒளி—ஸூர்ய கிரணங்களானவை, பரந்தன—பரவிவிட்டன; துன்னிய—(ஆகாசத்தில்) நெருங்கிய, தாரகை—நக்ஷத்திரங்களினுடைய, மின் ஒளி—மிக்க ஒளியானது, சுருங்கி—குறைவுபட்டது மன்றி, படர் ஒளி—பரந்த ஒளியையுடைய, பனி மதி இவன்—இக்குளிர்ந்த சந்திரனும், பசுத்தனன்—ஒளி மழுங்கினான்; பாய் இருள்-பரந்த இருட்டானது, அகன்றது — நீங்கிற்று; வைகறை மாருதம் இது — இந்த விடியற்காற்றானது, பை—பசுமை தங்கிய, பொழில் — சோலைகளிலுள்ள, கமுகின்—பாக்குமரங்களினுடைய, மடலிடை கீறி—மடலைக் கீறினதாலே, வண் பாளைகள் நாற—அழகிய பாளைகளானவை மணம் கமழ, (அப்பரிமளத்தை முகந்து கொண்டு) கூர்ந்தது—வீசாநின்றது; அடல்—பெரிய பலத்தை உடையதாய், ஒளி திகழ்தரு—தேஜஸ்ஸு விளங்காநின்றுள்ள, திகிரி—திருவாழியாழ்வானை, அம் தடகை—அழகிய பெரிய திருக்கையிலே உடைய, அரங்கத்தம்மா! பள்ளியெழுந்தருளாய்—

அவ:-மூன்றாம்பாட்டு. (சுடரொளியித்யாதி) ஆதித்ய கிரணங்கள் எங்கும் பரந்தன; நக்ஷத்ராதிபதியான சந்த்ரனும் விவர்ணனானான்; திருச்சோலையில் மடல்விரிந்த பாளையின் மணத்தைக்கொண்டு விடிகாற்றானது வந்தது; கையுந் திருவாழியுமான அழகைக்கொண்டு உணர்ந்தருளவேணுமென்கிறார். முதற்பாட்டில்-கீழ்க்கிக்கிலுதயகிரியிலே வந்தணைந்தானென்றது; இதில்-நேராகவுதித்து, தன்னுடைய தேஜஸ்ஸையெங்கும் பரப்பிக்கொண்டு வந்து தோற்றினானென்கிறார்.

வ்யா:—(சுடரித்யாதி) பார்த்தபார்த்த இடமெங்கும் ஆதித்ய கிரணங்கள் பரம்பிற்று; அத்தாலே நக்ஷத்ராதிகளுடைய தேஜஸ்ஸு தோற்றுதபடியாயிற்று. அவ்வளவன்றிக்கே, (படரொளி இத்யாதி) இரவெல்லாம் ஸாம்ராஜ்யம் பண்ணின சந்த்ரனும் ஒளி மழுங்கினுன்.

(பாயிருளகன்றது),அந்தச் சந்த்ரனுக்கு விகாஸஹேதுவாய்ப் பரம்பின இருளானது, மஹாராஜாக்கள் தோற்றினல் க்ருத்ரிமர் ஒளிக்குமாபோலே மறைந்தது. (பைம்பொழில் கமுகினித்யாதி) பசுமையையுடைத்தான

வ்யா:—(சுடரொளி பரந்தன சூழ்திசையெல்லாம்) சூழ்ந்த திக்குக்களெங்கும், சுடரொளியானது - ஆதித்யனுடைய தேஜஸ்ஸானது விஸ்த்ருதமாய்த்து. 11. "तेजसां राशिमूर्जितम्" (தேஜஸாம் ராஶிமூர்ஜிதம்) என்றும், † "பயிலும் சுடரொளி" என்றும் சொல்லுகிறபடியே தேவரீருடைய திருமேனியொளியானது எங்குமொக்க விஸ்த்ருதமாம்படியாக உணர்ந்தருளலாகாதோ வென்று கருத்து. (துன்னிய வித்யாதி) நெருங்கின நக்ஷத்ரங்களினுடைய பரஞ்செய்கிற தேஜஸ்ஸானது ஸங்குசிதமாய், விஸ்த்ருதமான ஒளியையுடைய குளிர்ந்த சந்த்ரனும், (பசுத்தனன்) விவர்ணனுன்; கருகினுனென்று கருத்து. ‡ "தாரகையின் புறந்தடவியப்பால் மிக்கு" என்றும் 12. "चन्द्रकान्ताननं रामं" (சந்த்ரகாந்தாநநம் ராமம்) என்றும் ஸர்வபதார்த்தங்களையும் தரிப்பிக்கப் பண்ணும் திருவடிகளை யுடையராய், ஸகலகலா பரிபூர்ணராய், நிஷ்களங்கனுன சந்த்ரனைப்போலேயிருக்கிற குளிர்ந்த திருமுகத்தை யுடையரான தேவரீர் திருப்பள்ளியுணர்ந்தருள லாகாதோ? ஆகாசப்பரப்பெல்லாம் / முத்துப் பந்தல் விரித்தாப்போலே யிருக்கிற நக்ஷத்ரங்களினுடைய தீப்தியும் மறைந்து இவற்றுக்கு நிர்வாஹகனுன சந்த்ரனுடைய பரந்த தீப்தியும் போய்த்து; தேவரீர் * அமலங்களாக விழித்தருளாமையாலே, சந்த்ரன் தன் பரிகரமுந் தானும் வேற்றுருக் கொண்டான்.

(பாயிருள்) வ்யாபித்த இருள். (அகன்றது) நிரஸ்தமாய்த்து. (பைம்பொழிலித்யாதி) கலக்கந்தெளிந்தால் தந்தாமுடைய போகம் ஒருக்குவாரைப் போலே. (மடலிடைக்கீறிவண் பாளைகள் நாற) பாளைக்கு வண்மையாவது - காற்றுக்குத் தன்பக்கலுள்ளத்தைக் கொடுக்கையிறே. (வைகறை) என்று – விடியற்காலம். (மாருதம்) காற்று; விடிகாற்று வருகையும், கமுகிலுண்டான பாளைகள்

---

† திருவாய் 3-7-1. ‡ திருநெடு-5. / (பா) முப்பல்.

4\. மேட்டிள மேதிகள் தளைவிடு மாயர்கள்
வேய்ங்குழ லோசையும் விடைமணிக் குரலும்
ஈட்டிய விசைதிசை பரந்தன வயலுள்
இரிந்தன சுரும்பினம் இலங்கையர் குலத்தை
வாட்டிய வரிசிலை வானவ ரேறே!
மாமுனி வேள்வியைக் காத்தவ பிரதம்
ஆட்டிய வடுதிற லயோத்தியெம் மரசே!
அரங்கத்தம்மா! பள்ளியெழுந்தருளாயே.

சோலைக்கமுகுகளின் பாளைகளானவை விரிய அதின்பரிமளத்தை முகந்து கொண்டு விடிவோறைக்காற்ருனது எங்கும் வ்யாபியாநின்றது.

(அடலொளியித்யாதி) திருவாழியாலே ப்ரதிபக்ஷத்தைப் போக்கிளுப் போலே கையுந் திருவாழியுமான அழகைக்காட்டி ஸஹஜசத்ருவான இந்த்ரியபாரவச்யதையைப்போக்கி, தேவரீரழகை அநுபவிக்கும்படி திருப் பள்ளி யுணர்ந்தருளவேணு மென்கிருர்.

விகஸிதமாகையும், இதிலுண்டான மணத்தைக் காற்று கொண்டு வருகையாலே மணம் வீஞ்சிற்று. கூருகையாவது—மிகுகை. /"மன் ருடு தென்றலு;லா" என்று-பொதுவான காற்றன்றியே விடிந்தமைக் கடையாளம் தெரியக்காற்று வரச்செய்தேயும் கண்வளர்ந்தருள வேணுமோ?

(அடலொளியித்யாதி) ஆதித்ய கிரணங்கள் மின்மினியாம் படியிறே திருவாழியாழ்வானொளி. பெரியமிடுக்கை யுடைத்தாய் ஒளிதிகழா நிற்பதாய், தேஜஸ்ஸு விளங்கா நின்றுள்ள திகிரியை யுடைத்தாய், வெறும்புறத்தில் ஆலத்தி வழிக்க வேண்டும் படியான அழகையுமுடைய திருக்கையிலே. (தடக்கை) திருவாழியாழ்வா னுக்கு இடம் போரும்படியான திருக்கை. (அரங்கத்தம்மா) ஆர்த்த ராளுர்க்கு முகங்கொடுக்க வந்த விடத்தே கிடந்துறங்கு மத்தனையோ? தேவரீர் திருப்பள்ளி யுணர்ந்தருள வேணுமென்கிருர்.

அரு:—மூன்ரும் பாட்டு. (சுடரொளியித்யாதி). (பரஞ்செய்கிற) ஆகாசத்துக்குப் பரபாகம்செய்கிற. (முப்பல்) முத்துக்கட்டின மேற்கட்டி. (ஒருக்குகை) நடத்துகை.

/ பெரியாழ்-திரு 4-8-9

பதவுரை:--மேடு இள மேதிகள்—உயரமும் இளமையும் உடைய எருமைகளை, தளை விடும்— (மேய்கைக்குக்) கட்டவிழ்த்து விடுகிற, ஆயர்கள்—இடையர் (ஊதுகிற) வேய்ங்குழல் ஓசையும்— புல்லாங் குழலின் நாதமும், விடை—எருதுகளின் (கழுத்திற்கட்டியுள்ள) மணி—மணிகளினுடைய, குரலும்–ஓசையும் (ஆகிய) ஈட்டிய இசை– இவ்விரண்டும் கூடின ஒலியானது, திசை பரந்தன–திக்குக்களெங் கும் பரவிவிட்டது; வயலுள் — கழனிகளிலுள்ள, சுரும்பு இனம்— வண்டுகளின் திரள், இரிந்தன—ஆரவாரித்துக்கொண்டு கிளம்பின; இலங்கையர் குலத்தை–ராக்ஷஸவர்க்கத்தை, வாட்டிய-உருவழித்த, வரி சிலை—அழகிய சார்ங்கத்தையுடைய, வானவர் ஏறே—தேவாதி தேவனே! மா முனி–விச்வாமித்ர மஹர்ஷியினுடைய, வேள்வியை— யாகத்தை, காத்து—ரக்ஷித்து, அவபிரதம் ஆட்டிய—அவப்ருதஸ்நா நம் செய்வித்து நிறைவேற்றிய, அடு திறல்-(விரோதிகளை) அழிக்க வல்ல பலத்தையுடையவனாய், அயோத்தி எம் அரசே—அயோத்தியா புரியை ஆளுகையாலே எங்களுக்கு ஸ்வாமியானவனே! அரங்கத் தம்மா பள்ளி எழுந்தருளாய்—

அவ:— நான்காம்பாட்டு. சக்ரவர்த்தித் திருமகனாயவதரித்தருளி விரோதி நிரஸநபூர்வகமாக ஆச்ரிதஸம்ரக்ஷணம் பண்ணியருளினாப்போலே த்வதநுபவ விரோதியைப்போக்கி அநுபவிக்கத் திருப்பள்ளியுணர்ந்தருள வேணுமென்கிறார்.

அவ:—நான்காம்பாட்டு. (மேட்டிளமேதிகளித்யாதி). ||"எருமை சிறுவீடு" என்கிறபடியே சிறு வீடன்றியே பெருவீடும் விடும்படியாய், இளங்கன்று மேய்க்கவுருப்பட்டுத் தளைவிடுகிற ஆயர் ஊதுகிற குழலினோசையும், நாகுகளின்மேலே செருக்கியோடுகிற விடையினுடையகழுத்தில் மணியோசையும், §"கார்மணியின வாடல்" என்கிறபடியே மணிக்குரலும் திக்குக்களெங்கும் பரந்தது; மதுபானம் பண்ணின வண்டுகள் ஆரவாரித்துக்கொண்டு கிளம்பிற் றின; இவற்றின் ஆர்ப்பாவமறப்போய் அதிக்ரமித்துச் செல்லா நின்றது; விரோதி நிரஸநசீலராய் ஸர்வரக்ஷகரான தேவரீர் திருப் பள்ளியுணர்ந்தருள வேணுமென்கிறார்.

|| திருப்பாவை-8 §....

வ்யா:-(மேட்டிளமேதிகளித்யாதி) கொம்புகள் அங்குரியா நின்றுள்ள இளையதான எருமைகளும், அவற்றை நியமிக்கக்கடவ இடையர் ஊதுகிற குழலோசையும், அதுக்குமேலே மேயப்புறப்பட்ட பசுக்களின் நடுவில் ரிஷபங்களின் கழுத்தின் மணி த்வநியுமாய், இசைபோலே திரண்ட த்வநி எல்லா திக்குகளிலுள்ள வயலெல்லாம் பரந்தன. (இரிந்தன சுரும்பினம்) அலருகிற கால புஷ்பங்களில் மதுவைப் பாநம்பண்ணின வண்டுகளானவை சப்திக்கத் தொடங்கிற்றின.

(இலங்கையரித்யாதி) துர்வர்க்கத்துக்கு எல்லாம் புகலிடமான லங்கைக்கு நிர்வாஹகனான ராவணனுடைய குலத்தை ஸபரிகரமாகமாய்த்த ஸ்ரீசார்ங்கத்தை உடையராய், ப்ரஹ்மாதிகளுடைய அபேக்ஷிதம் செய்யப் பெற்றோமென்னும் மேன்மையும் உடையவரே! விச்வாமித்ர பகவா

வ்யா:-(மேட்டிளமேதிகள்) இளங்கன்றாயிருக்கச்செய்தே ஓங்கியிருப்பனவான எருமைக்கன்றுகள். இவற்றினுடைய (தளைவிடு மாயர்கள்) தளைவிடுகையாவது-கட்டுவிடுகை. சிறு வீடன்றியே விடிந்துமேய்கையாலே பராக்கற்றுமேயுமே; பின்பு அவர்களுக்குப் பராக்கற்றபடியாலே குழலூதுமித்தனையிறே.

(விடைமணிக்குரலும்)பசுக்களும்விட்டு இவற்றுக்குக்கடவதான விடைமணியோசையும். 13. "ज्ञानेन हीनः पशुभिः समानः" (ஜ்ஞாநேந ஹீந: பசுபிஸ்ஸமாந:)என்னக்கடவதிறே. இப்படிக்கொத்த ஜ்ஞாநஹீநமான பதார்த்தங்கள்விட்டு ஸஞ்சரியாநின்றன. ஸர்வஜ்ஞரான தேவரீர் உணர்ந்தருளவேண்டாவோ? இப்படிப்பட்ட குழலோசையாலும் மணியோசையாலும், (ஈட்டியவிசைதிசைபரந்தன) திரண்ட த்வநிகளானவை திக்குக்களெங்கும், பரந்தன-விஸ்த்ருதமாய்த்து. (வயலுளிரிந்தன சுரும்பினம்) சோலைக்குள்ளிலன்றியே வெளிநிலமான வயலில் தடாகங்களிலுண்டான தாமரை செங்கழுநீரிலே மதுபாநம்பண்ணின வண்டுகளானவை ஆரவாரித்துக்கொண்டு சிதறிற்றின.

(இலங்கையர்குலத்தைவாட்டிய) லங்கையிலுண்டான ராவண ஸந்தாநத்தை வாட்டிய. வாட்டுகையாவது-நிச்சேஷமாக முடிக்கை; கரியாக்குகை. "வாட்டிய" என்றால் கரியாக்குமோவென்னில்; வீரபத்நியாகையாலே, ‡"கிள்ளிக்களைந்தானை" என்னுமாபோலே,

‡ திருப்பாவை-13.

னுடைய யாகத்துக்கு விக்ந கர்த்தாக்களாய் ராவண வதத்துக்கு அடியான தாடகாதாடகேயரை நிரஸித்து. (அவபிரத மாட்டிய) ஸமாராதந ரூபமான கர்த்தவ்யம் தலைக்கட்டி சத்ருபக்ஷம் மண்ணுண்ணும்படியான மிடுக்கை உடையராய், திருவயோத்யைக்கு நிர்வாஹகராய் வைத்து அவ்வவதாரத்துக்குப் பிற்பாடரு மிழக்க வேண்டாதபடி திருவயோத்யையிலுங்காட்டில் கோயிலை விரும்பின ஸர்வாதிகரான தேவரீர் உணர்ந்தருளி அடிமை கொண்டருள வேணுமென்கிறார். ... ...

இவரும் தம்முடைய வையாத்யத்தாலே விரோதித்தார் சொல்லும்படியே அநாயாஸமாகச்செய்தபடியைக்கொண்டு "வாட்டிய" என்றதித்தனை; இவை எறிசிதறும் சரமாகையாலே-* தீப்தபாவக ஸங்காஶங்களாகையாலே-அவைகளைக்கரியாக்கியல்லது விடாதே; 14. "**नेय-मस्ति**"(நேயமஸ்தி)யிறே. 15"**सीतायास्तेजसा दग्धा**"(ஸீதாயாஸ்தேஜஸா தக்தா)விறே. 16. "**काञ्चनभूषणैः**" (காஞ்சநபூஷணை:) என்னக்கடவதிறே. (வரிசிலைவானவரேறே) தர்ஶநீயமான வில்லையுடைய வானவரேறே. ராக்ஷஸரை நிரஸித்து அநுகூலனை ஸ்ரீவிபீஷணாழ்வானை வைத்தாப்போலே இந்த்ரனுடைய அமராவதியை தரிப்பித்து இந்தரனுக்கு ஸ்வர்க்கலோகத்தையும் கொடுத்தபடி. (மாமுனியித்யாதி) முநிகளாகிறார்-மநநஶீலரிறே. ‡ "நினைந்திருந்தே சிரமம் தீர்ந்தேன்" 17. "**एहि पश्य शरीराणि**" (ஏஹி பச்ய சரீராணி) இத்யாதி. எங்கள்பக்கலுள்ளதெல்லாம் குழைச்சரக்கு, உன் அம்பு பார்த்திருந்தோமென்னவல்லவர்களிறே; அப்படிப்பட்ட மஹர்ஷிகள் வந்தாலோ போகலாவது? (மாமுனி வேள்வியைக்காத்து) லங்கையை அழிக்கைக்கடியான வீரச்ரத்தையைச்சொல்லுகிறார். தந்தாம் கார்யங்களைத் தாந்தாமே மநநம்பண்ணுமவர்கள் முநிகள்; இவனுக்கு மாமுநித்வமாவது-தன்னுடைய தபஸ்ஸையழியமாறி, அவர்களை ஶபித்து, தன்னுடைய பாரதந்த்ர்யத்தையுமழித்து, பகவத்ஸ்வாதந்த்ர்யத்தையுமழியாதே, சக்ரவர்த்தித்திருமகனைக்கொண்டே கார்யம் தலைக்கட்டிக்கொள்ளுகை. அத்வர த்ராணம்பண்ணி, அவரைக்கொண்டே அவப்ருதஸ்நாநம் பண்ணி, அதுக்கீடான ப்ரதிபக்ஷத்தை முடிக்கைக்கடியான திறலையுடைய பராபிபவநஸாமர்த்ய முடையருமாய், 18. "**दशवर्ष सहस्राणि**" (தஶவர்ஷஸஹஸ்ராணி) என்றாப்போலே தீர்த்தம்

---

‡ பெரியாழ்திரு 5-4-8.

5. புலம்பினபுட்களும் பூம்பொழில்களின்வாய்
போயிற்றுக்கங்குல் புகுந்ததுபுலரி
கலந்ததுகுணதிசைக் கனைகடலரவம்
களிவண்டுமிழற்றிய கலம்பகம்புனைந்த
அலங்கலந்தொடையல்கொண்டடியிணைபணிவான்
அமரர்கள்புகுந்தனராதலிலம்மா!
இலங்கையர்கோன் வழிபாடுசெய்கோயில்
எம்பெருமான்! பள்ளியெழுந்தருளாயே.

பதவுரை:—பூ—பூத்திருக்கும், பொழில்களின் வாய்— சோலைகளிலுள்ள, புட்களும்—பறவைகளும், புலம்பின—(உணர்ந்து) ஆர

ப்ரஸாதிக்கையன்றிக்கே பிற்பாடராைரும் பெறும்படியாகக் கோயிலிலே கண்வளர்ந்தருளுகிற இதுக்கு ப்ரயோஜநம் வேண்டாவோ? விரோதிநிரஸநம் பண்ணினோமாகில் இனியென்னென்று கிடக்கலாமோ? அப்படியே ராக்ஷஸராலே பீடிதரான தேவஜாதிகள் வந்தால் உங்களுக்கு நான்செய்தபடி அழகிதோவென்று வினவியருளவேண்டாவோ என்கிறார். 4 "उत्तिष्ठ नरशार्दूल" (உத்திஷ்ட நரஶார்த்தூல) என்றுகொண்டு பண்டேயெழுப்பின ரிஷிகள் வந்தெழுப்பினாலோ தேவரீர் திருப்பள்ளி உணர்ந்தருளப் பார்க்கிறது? அடியோங்களை ரக்ஷிக்கைக்காக எழுந்திருந்தாலாகாதோ? ....

அரு:—நாலாம்பாட்டு. (மேட்டிளமேதிகளித்யாதி). (இரிந்தின) சிதறிற்றின சப்தம், "வாட்டிய" என்று சொல்லாநிற்க, தக்தமாக என்று அர்த்தம் கொள்ளும் போது, இப்படி ஒன்றை யொன்றாகச் சொன்ன இடமுண்டோவென்ன, லங்கையும் ராவணனுமிருக்க இல்லையென்று திருவடி சொன்னானென்கிறார் (நேயமஸ்தியிறே) என்று. தக்தமானதுக்கு ப்ரமாணம் அருளிச்செய்கிறார் (ஸீதாயா இத்யாதி). "காஞ்சநபூஷணை:" என்று அம்புகள் அழகாயிருக்குமா போலே வரிசிலையென்று வில்லும் அழகாயிருக்குமென்றபடி; (அமராவதி) இந்த்ரனுடைய பட்டணம். (நினைத்திருக்கை) ரக்ஷகனாக நினைக்கை; அப்படி நினைத்திருப்பார்களோ வென்ன அருளுகிறார் (ஏஹி பச்யேத்யாதி)

(அவரைக் கொண்டு) என்றது-பெருமாளுடைய திறலானது பெருமாளைக்கொண்டு அவனை அவப்ருதஸ்நாநம் பண்ணுவித்ததென்று திறலுக்கு விசேஷணம்; அப்படிப்பட்ட திறலுடையவரென்றபடி. ... ...

வாரஞ் செய்யா நின்றன; கங்குல்—இரவானது, போயிற்று—கழிந்தது; புலரி—காலைநேரம், புகுந்தது — வந்தது; குணதிசை—கீழ்த்திசையிலே, கனை—கோஷஞ் செய்கின்ற, கடல்—கடலினுடைய, அரவம்—ஓசையானது, கலந்தது—வியாபித்தது; களி — தேனைப் பருகிக் களிக்கின்ற, வண்டு—வண்டுகளானவை, மிழற்றிய—சப்திக்கப்பெற்றதாய், கலம்பகன் புனைந்த–பலவகைப்பூக்களாலே தொடுக்கப்பட்டதாய், அம்—அழகியதான, அலங்கல் தொடையல் கொண்டு—அலங்கல் மாலைகளை ஏந்திக்கொண்டு, அமரர்கள்—தேவர்கள், அடி இணை பணிவான்— (தேவரீருடைய) திருவடியிணைகளில் வணங்குவதற்காக, புகுந்தனர்—வந்து நின்றனர்; ஆதலில் — ஆகையாலே, அம்மா—ஸர்வஸ்வாமிந்! இலங்கையர் கோன் வழிபாடு செய்கோயில்—லங்கேச்வரனை விபீஷணாழ்வான் தாஸவ்ருத்திபண்ணப்பெற்ற கோயிலிலே (கண்வளர்ந்தருளுகிற) எம் பெருமான்!— எங்கள் ஸ்வாமியே! பள்ளி எழுந்தருளாயே—

அவ:—ஐந்தாம்பாட்டு. தேவஜாதியானது கற்பகங்களில் பூக்களெல்லாந் தொடுத்து மந்த்ரபுஷ்பம் பண்ணிப் பரிமாறுகைக்காக "அருள் பாடிடுவது எப்போதோ" என்று அவஸர ப்ரதீக்ஷராய் வந்து நின்றார்கள்; ஜந்மாதிகளில் தாழ்வு ஏற்றம்பாராதே அடிமை கொண்டருளும் தேவரீருணர்ந்தருளி அடிமை கொண்டருள வேணுமென்கிறார்.

வ்யா:-(புலம்பினவித்யாதி) திருச்சோலையில் பக்ஷிகளானவை உணர்ந்து ஆரவாரியா நின்றன. (போயிற்றுக்கங்குலித்யாதி) ஸர்வரையுமபிபவிக்கக்

அவ:-ஐந்தாம்பாட்டு. (புலம்பினவித்யாதி) முன்னில்பாட்டிலே-"வயலுளிரிந்தன சுரும்பினம்" என்றது; இப்பாட்டிலே-போதுவைகினால் உணரக்கடவதான பக்ஷிகளுமுணர்ந்தன என்கிறது. முன்னில்பாட்டில் உணர்ந்தவற்றுக்கும இப்பாட்டிலுணர்ந்தவற்றுக்கும் பகவத் ப்ரவணர்க்கும் ஸம்ஸாரிகளுக்குமுள்ள வாசிபோருங்காணும். வயலிலுள்ளவைபோலன்றிறே; சோலையாய் அதிலே பூம்பொழிலாயிருக்கச்செய்தே உணருகிறனவிறே. போதுவைகினபடி.

வ்யா:-(புலம்பின புட்களும்) ||"வண்டினமுராலுஞ்சோலை மயிலின மாலுஞ்சோலை கொண்டல்மீதணவுஞ்சோலை" என்றாரிறே.

|| திருமாலை-14.

கடவ தமஸ்ஸுக்கு ஆச்ரயமான ராத்ரியானது வாஸநையோடே போய்த்து. (புகுந்தது புலரி) ஸத்வோத்தர மாகையாலே ஆராதந யோக்யமான காலமும் ஸந்நிஹிதமாய்த்து. (கலந்ததித்யாதி) கீழைத்திக்கிலே கோஷிக்கையே ஸ்வபாவமான ஸமுத்ர கோஷம் எங்கும் வ்யாபித்தது. (களிவண்டித்யாதி) மதுபாநம் பண்ணிக்களிக்கிற வண்டுகளோடே கூடின நாநாவித புஷ்பங்களைத் தொடுத்து அந்த மாலைகளையேந்திக்கொண்டு தேவர்களடைய, எல்லார்க்கும் நாதனான தேவரீர் திருவடிகளிலே சாத்துகைக்கு அருள் பாடிடுவது எப்போதோவென்று புகுந்து நின்றார்கள்.

(ஆதலில்) ஆகையாலே, பராவரேசரான தேவரீர். (இலங்கையர் கோனித்யாதி) ராவணாநுஜனென்று பாராதே லங்காதிபதியான ஸ்ரீவிபீஷணாழ்வானாலே கொண்டாடப்பட்ட கோயிலிலே அஸ்மதாதிகளுக்கு முகந்

அவையெல்லாம் ப்ரீதிப்ரகர்ஷத்தாலே சலபாட, சில ந்ருத்தகீத வாத்யங்கள் பண்ண, அதுக்கு இசையச் சிலராடச் சிலர் கொண்டாடவிருந்ததிறே அங்கு; இங்கு "பெரியபெருமாள் இப்போதுவைகவும் பள்ளிகொள்வதே!" என்று கூப்பிடுமாபோலே இருக்கிறது. (போயிற்றுக்கங்குல்) முன்புபோலே அகன்றமாத்ரமேயன்றிக்கே ராத்ரியானது நிச்சேஷமாய்த்து; (புகுந்ததுபுலரி) தமஸ்ஸு நேராகப்போனல் பின்பு ஸத்வமேயாயிருக்குமாபோலே. ஆகையாலிறே ‡"பகற்கண்டேன்" என்றது. (கலந்தது குணதிசைக்கணைகடலரவம்) கோஷமாத்ரமன்றிக்கே எங்குமொக்க வ்யாபித்தது. (களிவண்டித்யாதி) உறவு முறையாரைப் பட்டினிவிட்டு விருந்தாணரைக் காலும் கலமும் வைத்து ஊட்டுவாரைப்போலேயிறே தேவரீர்படி.

ப்ரயோஜநாந்தரபரரான தேவர்கள் தந்தாம் பதப்ரம்சம் வாராமைக்காக, நன்றாய்ச் செறிந்து வண்டுகள் மதுபாநம் பண்ணிக்களித்துப் பாடிக்கொண்டு ஸேவியாநிற்பதாய்க் கலம்பகனாயிருந்துள்ள தொடையலங்கல்கள் கொண்டுவந்தார்கள்; அவர்களுக்காகிலும் முகங்கொடுத்தருளீரோ என்கிறார். (ஆதலிலம்மா) என் மாலை சாத்தாதபோதும் "என்னையனன்று" என்னவொண்ணாதிறே. இப்படி விண்ணப்பஞ்செய்யுமிவர்பேச்சு இனிதாயிருந்தவாறே பள்ளிகொண்டருள; (இலங்கையர்கோன வழிபாடுசெய்கோயில்) பள்ளிகொண்டருளவேணுமென்றவன் தானேவந்து "எழுந்திரும்" என்றாலோ திருப்பள்ளியுணர்ந்தருளுவது? வழிபாடு செய்கையாவது-

---

‡ இர-திருவ-31.

6\. இரவியர்மணிநெடுந்தேரோடுமிவரோ
இறையவர்பதினொருவிடையருமிவரோ
மருவியமயிலினனறுமுகனிவனோ
மருதரும்வசுக்களும் வந்துவந்தீண்டி
புரவியோடாடலும் பாடலும்தேரும்
குமரதண்டம்புகுந்தீண்டியவெள்ளம்
அருவரையனையநின்கோயில்முன்னிவரோ
அரங்கத்தம்மா பள்ளியெழுந்தருளாயே.

பதவுரை:—மணி—சிறந்ததாய், நெடு—பெரிதான, தேரோடும்—தேரோடுகூட, இரவியர்—பன்னிரண்டு ஆதித்யர்களும், இறையவர்—ஸம்ஸாரிகளுக்கு நிர்வாஹகர்களான, பதினொரு விடையரும்—ஏகாதச ருத்ரர்களும், மருவிய—பொருந்திய, மயிலினன்—மயில்வாஹநத்தையுடைய, அறுமுகன்—ஸுப்ரஹ்மண்யனும், மருதமும்—மருத்கணங்களான நாற்பத்தொன்பதின்மரும், வசுக்களும்—அஷ்டவஸுக்களும், வந்து வந்து — ஒருவர்க்கொருவர் முந்திக்கொண்டு வந்து, ஈண்டி—நெருங்கி நிற்க, (இவர்களுடைய வாஹநமான) புரவியோடு தேரும்—குதிரைகள் பூண்ட ரதங்களும், பாடலும் ஆடலும்—பாட்டும் ஆட்டமுமாய், குமரதண்டம்புகுந்து—தேவஸேநா ஸமூஹங்கள் வந்து புகுந்து, ஈண்டிய வெள்ளம்—நெருங்கியிருக்கிற திரளானது,

---

தரவிருக்கிற தேவரீர் திருப்பள்ளி யுணர்ந்தருளலேணு மென்கிறார். அதவா, ஸ்ரீவிபீஷணாழ்வானை அடிமை கொண்டாப்போலே அடியோங்களையுமடிமை கொண்டருள வேணுமென்கிறாராகவுமாம். ... ...

திருவுள்ளக்கருத்தறிந்து அடிமைசெய்கையிறே. (இலங்கையர் கோன் வழிபாடுசெய்கோயில்) இதுவுமோரேற்றமிறே இங்குத்தைக்கு. (எம்பெருமான்) ஆச்ரிதபராதீநரான தேவரீர் திருப்பள்ளி யுணர்ந்தருளவேணுமென்கிறார். ....

அரு:—அஞ்சாம்பாட்டு. (புலம்பினவித்யாதி), (புலரி) விடிவு; விடிவென்றால் ஜ்ஞாநத்தைக் காட்டுமோவென்ன அருளிச்செய்கிறார் (ஆகையாலிறேயித்யாதி), ஸமுத்ரம் மிகவும் த்வநிக்கை விடிவுக்கடையாளம். தமக்கு முகங்கொடாமல் ப்ரயோஜநாந்தரபரர்க்கு முகங்கொடுக்கையைப் பற்ற அருளிச்செய்கிறார் (உறவுமுறையாரித்யாதி). (கால்) தாலக்கால்; அம்மானுதல். அம்மானுகையாலே மாலை சாத்தவேணும். ...

அரு வரை அனைய — பெரிய மலைபோன்ற, கோயில் — கோயிலில், நின் முன்—தேவரீர் திருக்கண்ணோக்கத்திலே (நிற்கின்றது;) அரங்கத்தம்மா! பள்ளி யெழுந்தருளாயே—

அவ:-ஆறும்பாட்டு. தேவஸேநாபதியோடேகூட ஜகத்துக்கு நிர்வாஹகரான ஸகல தேவதைகளும் ஸபரிகரராய்க் கொண்டு ஸ்வாபிமத ஸித்த்யர்த்தமாக ஆச்ரயிக்கவந்து நின்றார்கள்; தேவரீர் உணர்ந்தருளி விசேஷகடாக்ஷம் பண்ணியருளவேணுமென்கிறார்.

வ்யா:—(இரவியரித்யாதி). த்வாதசாதித்யர்கள் தங்களுடைய விலக்ஷணமாய்ப் பெரிதான தேரோடேவந்தார்கள். (இறையவரித்யாதி) ஜகத்துக்கு நிர்வாஹகர்ரன ஏகாதசருத்ரர்கள் தங்களுடைய வாஹநங்களான ருஷபங்களும் தாங்களுமாக வந்து நின்றார்கள். (மருவியவித்யாதி) தேவஸேநாதிபதியான ஸுப்ரஹ்மண்யன் தன் வாஹநமான மயிலுந் தானுமாய் வந்து நின்றான். (மருதருமித்யாதி) தேவதா விசேஷமான மருத்கணங்கள் நாற்பத்தொன்பதின்மரும், அஷ்டவஸுக்களும், ஒருவர்க்கொருவர் முற்கோலிக் கொண்டு வந்து திரண்டனர்.

(புரவியோடித்யாதி)தேவர்களுடைய வாஹநமான புரவிபூண்ட தேரும் பாட்டுக்களும் ஆட்டமுமாய், தேவஸேநாபதியான ஸுப்ரஹ்மண்யனோடே

வ்யா:—ஆறும்பாட்டு. (இரவியரித்யாதி) தேவரீர் பணிக்கடைத்த ஆதித்யனே அன்றிக்கே, மற்றும் சோம்பியிருக்கிற ஆதித்யர்களும் வந்தார்கள். (இறையவரித்யாதி) 19. "पशूनामधिपतिः" (பஶூநாமதிபதி:) என்கிறபடியே-தான் கேவலம் பசுஸமராயிருப்பார்க்குக் கடவனாகவேணுமென்றானிறே. (மருவியமயிலினன்) அவர்கள் தேர்களினின்றும் ருஷபங்களினின்றுமிழியவுங்கூடும்; இவனை மயிலோடே கூடக் கருப்பிடித்தது என்னும்படியாயிருக்கை. தேவஸேநாபதியிறே. (மருதரும் வசுக்களும் வந்து வந்தீண்டி) மருத் தேவதைகளும், அஷ்டவஸுக்களும், முற்பட்டார் முற்படபடியே வந்து திரண்டு. (புரவியோடித்யாதி) தேர் ப்ரஸ்துதமாகையாலே தேர்பூண்ட புரவியென்னவுமாம். அன்றியே, அவ்வவரேறிவந்த வாஹநமென்னவுமாம். (குமரதண்டம் புகுந்தீண்டிய வெள்ளம்) "தேவஸேநாபதி" என்று முன்னே சொல்லுகையாலே, "குமரன்" என்று-அவன்பேராய், "தண்டம்" என்று-தண்டுக்குப்பேராய், இத்தால்-தேவஸேநா ஸமூஹத்துக்குப்பேராய், தேவஸேநாபதி வந்தால்

7. அந்தரத்தமரர்கள் கூட்டங்களிவையோ
அருந்தவமுனிவரும் மருதருமிவரோ
இந்திரனானையும் தானும் வந்திவனே
எம்பெருமானுன கோயிலின்வாசல்
சுந்தரர்நெருக்க விச்சாதரர்நூக்க
இயக்கரும்மயங்கினர் திருவடிதொழுவான்
அந்தரம்பாரிட மில்லைமற்றிதுவோ
அரங்கத்தம்மா பள்ளியெழுந்தருளாயே.

பதவுரை:—எம் பெருமான்-எனக்கு ஸ்வாமியான, உன கோயிலின் வாசல்—தேவரீருடைய திருக்கோயிலின் வாசலிலே, இந்திரன்

திரண்டு, பரிச்சேதிக்க வொண்ணாதபடி திரளாய்க் கொண்டு. மஹாமேருவை ஒத்திருந்துள்ள கோயிலில் திருக்கண்ணுக்கத்திலே ப்ரதம கடாக்ஷத்துக்காகவந்து நின்றார்கள். ப்ரயோஜநாந்தரபரரோடு அநந்யப்ரயோஜநரோடு வாசியற ஸர்வர்க்கும் நிர்வாஹகராய்க் கொண்டு கோயிலிலே கண் வளர்ந்தருகிற தேவரீர் உணர்ந்தருளி விசேஷகடாக்ஷம் பண்ணியருளவேணுமென்கிறார். ... ...

தேவஸேனையும் வரக்கடவதிறே. அங்ஙனன்றியே, தேவஜாதியாகையாலே ஷோடஶவயஸ்கராயிருப்பர்களிறே. இனி "தண்டம்" என்கிறது-அவ்வவருடைய பெரியதிரளை. அவ்வவராயுத பேதங்களை யென்னவுமாம்.

(ஈண்டிய வெள்ளம்)நால்வரிருவரோ? வெள்ளமாயன்றோ கிடக்கிறது? (அருவரையித்யாதி) அணியனார் செம்பொனாய வருவரையனைய கோயிலிறே. த்வாதஶாதித்யர்கள், ஏகாதஶருத்ரர்கள், தேவஸேநாபதியான ஸுப்ரஹ்மண்யன், மருத்துக்களாகிற தேவதைகள், அஷ்டவஸுக்கள், மற்றுஞ் சொல்லிச்சொல்லாத தேவதைகளடைய ஸபரிகரராய், தேவரீர் திருப்பள்ளி யுணர்ந்தருளும்போதில் ப்ரதம கடாக்ஷத்தை நினைத்து, "நான்முற்பட, நான்முற்பட" என்று எல்லாரும் திரண்டுவந்து நின்றார்கள்; திருப்பள்ளியுணர்ந்தருளிக் கடாக்ஷித்தருளவேணுமென்கிறார். ....

அரு.—ஆறாம்பாட்டு. (இரவியரித்யாதி) "இறையவர்" என்பானென்னென்ன அருளிச்செய்கிறார் (பசூநாமித்யாதி). (தண்டம்) ஸமூஹமாதல், ஆயுதமாதல்.

நானும்—தேவேந்திரனும், ஆனையும்—(அவனது வாஹநமான)ஐராவத யானையும், வந்து—வந்திருப்பது மன்றி, அந்தரத்து அமரர்கள்—அண்டத்துக்குள் இராநின்ற தேவர்களும், கூட்டங்கள்—இவர்களுடைய பரிவாரங்களும், அரு தவம் முனிவரும்—மஹா தபஸ்விகளான ஸநகாதி மஹர்ஷிகளும், மருதரும்—மருத்கணங்களும், இயக்கரும்—யக்ஷர்களும், சுந்தரர் நெருக்க—கந்தருவர் நெருக்கவும், விச்சாதரர் நூக்க-வித்யாதரர்கள் தள்ளவும், திருவடி தொழுவான் மயங்கினர்-(தேவரீருடைய) திருவடிகளைத் தொழுவதற்காக வந்து மயங்கி நின்றனர்; அந்தரம்—ஆகாசமும், பார்—பூமியும், இடம் இல்லை—இடைவெளியில்லாமலிருக்கிறது; அரங்கத்தம்மா! பள்ளியெழுந்தருளாய்—

அவ;—ஏழாம்பாட்டு. முதற்பாட்டில் ஸங்க்ரஹேண சொன்னத்தை இப்பாட்டுத் தொடங்கி மேலில் பாட்டுக்களாலுமாக விஸ்தரிக்கிறார். கீழ்ச் சொன்ன தேவதைகளுக்கு நிர்வாஹகனான இந்த்ரனும், வித்யா ப்ரவர்த்தகரான ஸப்தருஷிகளும், திருப்பள்ளியெழுச்சி திருவடித்தொழ ஸபரிகரராக ஆகாசாவகாசமிடம் அடையும்படி வந்து புகுந்தார்கள்; திருப்பள்ளியுணர்ந்தருளி இவர்களை அடிமை கொண்டருள வேணுமென்கிறார்.

அவ:—ஏழாம்பாட்டு. (அந்தரமித்யாதி) முன்னிற்பாட்டில் தேவஸேநாபதியானவன் தன்வாஹநத்தோடும் தன்பரிகரங்களோடும் வந்தமைசொல்லிற்று; இப்பாட்டில்-தேவஜாதிக்கு நிர்வாஹகனான இந்த்ரன் தன்வாஹநத்தோடே ஸபரிகரனாய்வந்தபடி சொல்லுகிறது. தேவஜாதியை மெய்க்காட்டுக்கொள்ள தேவரீரிட்ட வகைசெய்வானாய் வந்தானென்கிறது; 8.“भीषास्मात्” (பீஷாஸ்மாத்) இத்யாதிப்படியே.

வ்யா:— “இந்திரனானையுந் தானும்வந்திவனோ” என்கிறபதம் அர்த்தக்ரமத்தாலே முதலாகக்கடவது; இப்படியாமோவென்னில்; இப்பாட்டுக்குத் தாத்பர்யம்-இந்த்ரன் வந்தபடி சொல்லுகையாலே முதலாகக்கடவது. அக்ந்யாஹிதரென்னக்கடவதாயிருக்கச்செய்தே ஶப்தச்சேர்த்தி அர்த்தச்சேர்த்திக்காக ஆஹிதாக்நியரென்றதிறே. ப்ரணவம் ஶப்தத: ஆத்மஸ்வரூபம் சொல்லிற்றேயாகிலும் அர்த்தத: பகவத் ஸ்வரூபமிறே சொல்லுகிறது. “ராஜபுருஷன்” என்றால் புருஷன் விஶேஷணமாய் ராஜாவின் பக்கலிலே ப்ராதாந்யம் கிடக்குமாபோலே.

வ்யா:—(அந்தரமித்யாதி). அபிமாநிகளான அந்தர ஜாதிகளடையத் தங்களுடைய பரிகரமும் தாங்களும் பக்ஷாபிமாநராய்த் திரண்டுவந்து:நின்றார்கள். இத்தால்-கீழ்ச்சொன்ன அதிகாரிகளான தேவதைகளை யொழிய அநுக்தமான தேவதா கணத்தை அருளிச்செய்கிறார். (அருந்தவமித்யாதி) ஒருத்தராலும் செய்து முடிக்கவொண்ணாத தபஸ்ஸையுடைய ஸநகாதிகளும் இந்த்ராதிகளுக்கு ப்ரத்யாஸந்நரான மருத்கணங்களும் வந்து நின்றார்கள். (இந்திரனித்யாதி) ஸர்வாத்யக்ஷனான தேவேந்த்ரன் தன் வாஹநமான ஐராவதமும் தானுமாய் வந்துநின்றான்.

(எம்பெருமானித்யாதி) ஸர்வேச்வரனான தேவரீருடைய கோயில் திருவாசல். (சுந்தரர் நெருக்கவித்யாதி) கந்தர்வர்கள் நெருக்க, அவர்களுடனே வித்யாதரரும்நூக்க, யக்ஷருமொன்றாகத் திருப்பள்ளி யுணர்ந்தருளும்போதையழகு கண்டு திருவடித் தொழுது திருப்பல்லாண்டு பாடுகைக்

(அந்தரத்தமரர்கள் கூட்டங்களிவையோ) அந்தரம் அண்டம் ஆகாசமென்று—தேவலோகத்துக்குப்பேர். "கேசவன் தமர்" என்கிறதல்லவே. அவர்கள் வர்த்திக்கிற தேசத்தையிட்டுச்சொல்லுமித்தனையிறே தேவர்களை. பன்மை-கூட்டங்களின் பன்மை(அருந்தவ முனிவர்) ஸப்தரிஷிகளாகவுமாம்; பெறுதற்கரிய தபஸ்ஸைப்பண்ணி விரோதிநிவ்ருத்தி பண்ணினவர்களென்னவுமாம். (மருதருமிவரோ) மருத்தேவதைகள்; "கூட்டங்கள்" என்கிறது மூன்றிடத்திலும் வைத்துக்கொள்ளலாம்.

(எம்பெருமானுன கோயிலின் வாசல்) அணைந்தார்கள், வந்தார்களென்கிறவளவல்ல;பார்த்தருளீர்! திருவாசலிலே வந்தார்கள். ||"பின்னிட்ட சடையானும் பிரமனுமிந்திரனும் துன்னிட்டுப் புகலரிய" என்கிறபடியே. (சுந்தரர் நெருக்க) தேவஜாதியிலே ஒரு பேதம். "சுந்தரம்" என்று-அழகாய், அத்தாலே-பாடுவாரென்னவுமாம். சுந்தரரென்று-கந்தர்வர். (விச்சாதரர்நூக்க) அதிலே முன் கைவலியராயிருப்பார் சிலர். (இயக்கரும் மயங்கினர்) யக்ஷரென்று கொண்டு ம்ருதுப்ரக்ருதிகளாயிருப்பார் சிலர். (மயங்கினர்)நெருக்கம் பொறுக்கமாட்டாமையாலே மோஹித்தார்கள். இவர்கள் இங்ஙனே படவேணுமோவென்றால், (திருவடித்தொழுவான்) தேவரீரைத் திருவடித் தொழுகையிலுள்ள நசையிருந்தபடி. †உள்நெருக்கத்

|| பெரு-திரு 4-3. † (பா) நெருக்கற்றவிடத்திலே கண்டாலோ.

8. வம்பவிழ்வானவர் வாயுறைவழங்க
மாநிதிகபிலையொண்கண்ணாடிமுதலா
எம்பெருமான்படிமைக் கலம்காண்டற்கு
ஏற்பனவாயின கொண்டுநன்முனிவர்
தும்புருநாரதர் புகுந்தனரிவரோ
தோன்றினனிரவியும் துலங்கொளிபரப்பி
அம்பரதலத்தில்நின் றகல்கின்றதிருள்போய்
அரங்கத்தம்மா பள்ளியெழுந்தருளாயே.

பதவுரை:—வழங்க—(தேவரீருக்கு) ஸமர்ப்பிப்பதற்காக, வாயுறை—அறுகம்புல்லும், மா—சிறந்த, நிதி—சங்கநிதி பத்மநிதிகளும் (கையிலே யுடையராய்க்கொண்டு)வம்பு அவிழ்-மணம் மிகுந்த வானவர்—தேவர்களும், கபிலை-காமதேநுவும், ஒண்-ஒளி பொருந்திய, கண்ணாடி முதலா—கண்ணாடி முதலாக, எம்பெருமான்—ஸ்வாமியான தேவரீர், காண்டற்கு — கண்டருளுகைக்கு, ஏற்பன ஆயின — தகுதியாயுள்ளவையான, படிமைக் கலம் கொண்டு — உபகரணங்களெல்லாவற்றையுங்கொண்டு, நல் முனிவர் — மஹரிஷிகளும், தும்புரு நாரதர்—தும்புரு நாரதர்களும், புகுந்தனர்—வந்து நின்றார்கள்; (இதுவுமன்றி,)இரவியும்—சூரியனும், துலங்கு ஒளி-(தனது) மிக்க தேஜஸ்ஸை, பரப்பி-எங்கும் பரவச் செய்துகொண்டு, தோன்றினன்—உதயமானான்; இருள்—இருளானது, அம்பரதலத்தில் நின்று—ஆகாசத்தினின்றும், போய் அகல்கின்றது-நீங்கிப்போயிற்று; அரங்கத்தம்மா! பள்ளி எழுந்தருளாய்—

குண்டான ஆசையாலே ஒருவர்க்கொருவர் முற்கோலி மேல்மேலென நெருக்குண்டு மோஹியா நின்றார்கள். (அந்தரமித்யாதி) ஆகாசத்திலும் பூமியிலும் இடமில்லாதபடியாய்த்து. த்வாராத்யக்ஷராலும் நிற்கையரிதாம்படி நெருக்குப்படா நின்றார்கள்; ஸர்வஸ்வாமியான தேவரீர் உணர்ந்தருளி அடிமை கொண்டருள வேணுமென்கிறார். ... ...

தைக்கண்டோமென்றால், புறம்புதான் நெருக்கற்றிருக்கிறதோவென்கிறார் மேல் (அந்தரமித்யாதி) ஆகாசத்தோடு பூமியோடு வாசியற விவரமற நெருங்கிற்று; தேவரீர் திருப்பள்ளியுணர்ந்தருளிப் பார்த்தருளீரென்கிறார். ....

அரு:—ஏழாம்பாட்டு. (அந்தரமித்யாதி) அர்த்தம் வ்யுத்க்ரமமாயிருக்க, சப்தம் சேர்ந்தவிடமுண்டோ என்ன அருளிச்செய்கிறார் (அக்ந்யாஹிதேத்யாதி). சப்தம் ஒன்றாயிருக்க, அர்த்தப்ராதாந்யமாகச் சொன்னவிடமுண்டோவென்ன (ப்ரணவமித்யாதி). (விசசாதரர்) வித்யாதரர். "அந்தரம், பார், மற்று, இடமில்லை" என்றந்வயம். ... ...

அவ:— எட்டாம்பாட்டு. தேவரீர் திருவாராதநத்துக்கு அநுரூபமான ப்ராத:காலமானது ஸந்நிஹிதமாய்த்து; ஆராதநாங்கமாய்க் கண்டருளுகைக்கு ஸத்ருசமான உபகரணங்கள்கொண்டு அநந்ய ப்ரயோஜநரான ருஷிகள்வந்து நின்றார்கள்; திருப்பள்ளி யுணர்ந்தருளி அவற்றைக் கண்டருளவேணுமென்கிறார்.

வ்யா:—(வம்பவிழித்யாதி) பரிமளிதமானஸ்வர்க்கத்திலே வர்த்திக்கக் கடவ தேவர்கள் கோக்ராஸங்கள் கொண்டுவந்து நின்றார்கள். (மாநிதியித்யாதி) சங்கநிதி பத்மநிதிகளும், கபிலாஸுரபிகளும், திருக்கண்ணாடி முதலாக ஸர்வஸ்வாமியான தேவரீர் கண்டருளுகைக்கு ஸத்ருசமான உபகரணங்களுமடையக்கொண்டு அநந்ய ப்ரயோஜநரான ருஷிகள்வந்து அவஸர ப்ரதீக்ஷராய் நின்றார்கள்

அவ:—எட்டாம்பாட்டு. (வம்பவிழித்யாதி) முன்னில் பாட்டில் இந்த்ரன் ஸபரிகரனாய் வந்தபடி சொல்லிற்று; இப்பாட்டில்-திருப்பள்ளியுணர்ந்தருளினால் கண்டருளக்கடவ உபகரணங்களை மங்களார்த்தமாக அவரவர்கள் கொடுவந்து நின்றார்களென்கிறது.

வ்யா:—(வம்பவிழ்வானவர் வாயுறைவழங்க)வானவர்-தேவஜாதி. (வம்பவிழ்வானவர்) நித்யமான யௌவநத்தையுடையவர்களென்னுதல்; ஸௌகந்த்யத்தையுடையவர்கள், தந்தாம் பதங்களுக்குத்தக்க பூமலர்களை உடையவர்களென்னுதல். (வாயுறைவழங்க) "வாயுறை வழுக்க" என்றத்தைமெலித்து, "வாயுறைவழங்க" என்றாக்கி, அவர்களுடைய நியமநப்ரகாரத்தை நினைக்கிறது. "வாயுறை" என்றது-அறுகம்புல். "வம்பவிழ்" என்றது-ஸச்ரத்தமாயிருக்கை. (மாநிதி) "நிதி" என்று-சங்கநிதி பத்மநிதியாகவுமாம்; நிதியென்று நவரத்நாதிகளாகவுமாம்; மாநிதியென்றது-மஹார்க்க மென்றபடி. நித்யதாநத்துக்கு தநராசிகளைச் சொல்லிற்றாகவுமாம்.

(கபிலை) பசுக்கள் வரக்கடவதிறே வழக்கத்துக்குறுப்பாக. வாயுறை, மாநிதி, கபிலை, மற்றும் சொல்லிச்சொல்லாத உபகரணங்களெல்லாம் வந்தன; கண்டருளுகைக் குறுப்பாகத் திருக்கண்ணாடி தொடக்கமானவையும் எல்லாம்வந்தன. (ஏற்பனவாயின கொண்டு) தேவரீர்க்கு, ஸத்ருசமானவை-அநுரூபமானவை. (நன் முனிவர்) அத்தலைக்குப் பாங்கானவற்றையே மநநம் பண்ணுமவர்கள்.

9. ஏதமில்தண்ணுமையெக்கம்மத்தளி
யாழ்குழல்முழவமோடிசைதிசைகெழுமிக்
கீதங்கள்பாடினர்கின்னரர்கருடர்கள்
கந்தருவரவர்கங்குலுளெல்லாம்
மாதவர்வானவர்சாரணரியக்கர்
சித்தரும்மயங்கினர்திருவடிதொழுவான்
ஆதலிலவர்க்குநாளோலக்கமருள
அரங்கத்தம்மா பள்ளியெழுந்தருளாயே.

(தும்புரு நாரதரித்யாதி)மங்களகீதங்கள் பாடுகைக்குத் தும்புரு நாரதர் களும்வந்து நின்றூர்கள். (தோன்றின னிரவியுமித்யாதி)மிக்க தேஜஸ்ஸை யுடைய ஆதித்யனும் தன் தேஜஸ்ஸைப் பரப்பிக்கொண்டுவந்து தோன்றி ஞன். (அம்பரமித்யாதி) ஆகாசத்தினின்றும் இருள்போயிற்று. பாஹ்ய மான அந்தகாரமிறே அவனுல் போக்கலாவது; ஸர்வரக்ஷகரான தேவரீர், ஆந்தரமான அந்தகாரத்தைப்போக்க, திருப்பள்ளியுணர்ந்தருள வேணு மென்கிறூர். ... ...

(தும்புரு நாரதர் புகுந்தன ரிவரோ) பெருமாள்பள்ளிகொண் டருளின பின்பு இசை கேட்டருளுமாபோலே. (தோன்றினனிரவி யுந் துலங்கொளிபரப்பி) "அவ்வோபணிக்குக் கடவார்கள் எடுத்து வந்தார்கள்; அவற்றைக்கண்டருளவேணும்" என்று காட்டுவாரைப் போலே, ஸஹஸ்ரகிரணங்களாகிற பந்தத்தைக்கொண்டு ஆதித்யனும் வந்தான். (அம்பரதலத்திலித்யாதி) இருளானது ஒருபயண மெழ வாங்கிற்று என்றுப்போலேயிறே முனபு சொல்லிற்று. அவ்வள வல்ல, ஆகாசத்திலும் ஸஞ்சரிக்கவொண்ணுதபடி நிரஸ்தமானபடி சொல்லுகிறது. பாஹ்யமான இருளானது நிரஸ்தமாஞல் ஆந்தர மான இருளைப்போக்கியருள வேண்டாவோ? தேவரீர் திருப்பள்ளி யுணர்ந்தருளி * அமலங்களாக விழித்தருளீரென்கிறூர். ....

அரு:—எட்டாம்பாட்டு (வம்பவிழித்யாதி) "வம்பு" என்று புதிதாய், யௌவநமாதல், பரிமளமாதல். நியமநப்ரகாரம்-உத்தேச்ய விஷயத்தைக் கிட் டும்போது கையும் அறுகம்புல்லுமாகக் கிட்டவேணுமென்கிற நியதி. (வம் பவிழ்) வாயுறைக்கு விசேஷணமாகவுமாம். (வழக்கத்துக்கு) தாநத்திற்குறுப் பாக. எம்பெருமான் காண்டற்குப் படிமைக்கலமாவது—மற்றுமுண்டான உப கரண பதார்த்தம். இசைகேட்டருளுகை-தாலாட்டுக்கேட்டு உகக்குமாபோலே, உணர்ந்தருளும்போதும் பாட்டுக்கேட்கைக்காகப் பாடவந்தார்களென்றபடி.

பதவுரை:—ஏதம் இல்-குற்றமற்ற, தண்ணுமை-சிறுபறையும், எக்கம்—ஒற்றைத்தந்தியையுடைய வாத்தியமும், மத்தளி—மத்தளமும், யாழ்—வீணையும், குழல்—புல்லாங்குழல்களுமாய், திசை—திக்குக்களெங்கும், முழவமோடு-இவற்றின் முழக்கத்தோடு, இசை கெழுமி பாடினர்—இசை மாட்டிப் பாடக்கடவரான, கின்னரர்—கின்னரர்களும், கருடர்-கருடர்களும், கந்தருவர் அவர்-அதோ நிற்கும் கந்தர்வர்களும், கங்குலுள் எல்லாம் — இரவெல்லாம், மா தவர்—மஹர்ஷிகளும், வானவர் — தேவர்களும், சாரணர்—சாரணர்களும், இயக்கர்—யக்ஷர்களும், சித்தரும்—ஸித்தர்களும், திருவடி தொழுவான் — (தேவரீருடைய) திருவடிகளில் வணங்குகைக்காக, மயங்கினர்—(நெருக்கத்தில் வருந்தி) மோஹமுற்றனர்; ஆதலில்—ஆகையாலே, அவர்க்கு—அவர்களுக்கு, நாள் ஓலக்கம் அருள—பகலோலக்கமருளுகைக்காக, அரங்கத்தம்மா! பள்ளியெழுந்தருளாய்—

அவ:—ஒன்பதாம்பாட்டு. திருப்பள்ளி யுணர்ந்தருளும்போதையழகு கண்டு திருவடித்தொழவும், அழகோலக்கம் இருக்கும்படி கண்டு அடிமை செய்யவும் வேணுமென்று, தந்தாமுடைய பரிகரமான மங்களவாத்யங்களும் வீணைகளுமாய் உகளித்துக்கொண்டு யக்ஷகந்தர்வாதிகள் வந்து நின்றார்கள்; அடியேனுக்காகத் திருப்பள்ளியுணர்ந்தருளி அடிமைகொண்டருள வேணுமென்கிறார்.

வ்யா:—(ஏதமிலீத்யாதி.) நிர்த்தோஷமான மங்களவாத்ய விசேஷங்களும். ஏகதந்த்ரீ-எக்கம்; மத்தளி என்னவுமாம்; ஒருபறை விசேஷம். யாழ்விசேஷங்களும், குழல் விசேஷங்களுமாய்த் திக்குக்களெங்கும் முழங்

அவ:—ஒன்பதாம்பாட்டு. (ஏதமிலித்யாதி) முன்னிற்பாட்டில் நித்யதானத்துக்குறுப்பானவையும் மற்றும் கண்டருளக்கடவனவும் வந்தனவென்றது; இப்பாட்டில்-தேவரீர் திருப்பள்ளியெழுச்சிக்கு ந்ருத்தகீதவாத்யங்களுக்குக்கடவரானவர்கள் வந்தார்களென்கிறது.

வ்யா:—(ஏதமில்தண்ணுமை) ஏதமென்று-குற்றம். இல் என்று இல்லாமை. குற்றமற்ற வாத்யமென்கிறது. "தண்ணுமை" என்றது-சிறுபறை. ஒருதலைப்பறை; எக்கம்-தாளம். ஏகதந்த்ரியென்னவுமாம். மத்தளி-சிறுமத்தளி. "யாழ்" என்று-இசைக்குமுன்னேட்

கிக்கொண்டு மங்களமான கீதங்கள் பாடக்கடவரான கிந்நராதிகளும், கந்தர்வர்களும், மஹாதபஸ்ஸையுடைய ரிஷிகளும், அநுக்தரான தேவர்களும், சாரணயக்ஷஸித்தர்களுமடையப் புகுந்து திருவடித்தொழுகையி லுண்டான த்வரையாலே நெருக்காநின்றுர்கள்; ஸர்வரக்ஷகரான தேவரீர் உணர்ந்தருளி அழகோலக்கமாகவிருந்து அடிமை கொண்டருளவேணு மென்கிறுர். ... ...

டுக் கொள்வதொன்று. "குழல்" என்று ஜாத்யேகவசநம். (முழவம்) பெருவாயன்; பெருமத்தளியென்றுமாம். இவற்றிலுண்டான நாதமானது திக்குக்கள்தோறும் கெழுமிற்று- நிறைந்தது. ஏதமில்- தண்ணுமை, ஏதமில்-எக்கமென்று எல்லாவற்றிலும் வைத்துச் சொல்லலாம். (கீதங்கள் பாடினர் கிந்நரர் கெருடர்கள்) எல்லாரும் விடிவோறே வருவாரும், விடிந்து வருவாருமிறே; இவர்களைத் திருவுள்ளம் பற்றியருள வேணும்.

(கிந்நரர் கெருடரித்யாதி) மங்களகாநம் பாடுவார். அதில் தலைவரான கந்தர்வர்களுள் இட்டவர்களைப் பார்த்தருளீர். (கங்குலுளெல்லாம்) ராத்ரியெல்லாம். (மாதவர்) மஹாதபஸ்ஸையுடைய ரிஷிகள். (வானவர்) வைமாநிகரான தேவர்கள். (சாரணர்) தேவ ஜாதி தன்னிலே யுலாவித்திரியுமவர்கள். (இயக்கர்) யக்ஷரென்று- தேவஜாதியிலே சிலர். (சித்தர்) ஸித்தர்கள். (சித்தரும் மயங்கினர் திருவடித்தொழுவான்) வைமாநிகரான தேவஜாதியோடு, பெரிய தபஸ்ஸுகளைப் பண்ணின மதிப்பரான ரிஷிகளோடு, யக்ஷஸித்த சாரணரென்கிற தேவர்களோடு கிந்நரர் கெருடரென்கிற மங்கள காநம் பாடுவாரோடு இவர்களில் தலைவரான கந்தர்வரோடு வாசியற, சிறியார் பெரியாரென்னுதே தேவரீர் திருப்பள்ளி யுணர்ந்தருளும் போதில் ப்ரதம கடாக்ஷத்தை நினைத்து ஒருவர்க்கொருவர் முற்கோலி நெருக்குண்ணு நின்றுர்கள்; -மங்களவாத்யங்கள், குழல்கள் இவைகொண்டு அடிமை செய்யுமவர்களும் திருப்பள்ளி யெழுச்சிக்கு உதவவந்தார்கள். (ஆதலிலித்யாதி) §"நன்மணிவண்ணனூர்", என்கிறபடியே திருப்பள்ளி யுணர்ந்தருளி யெல்லாரும் வாழும்படி கடாக்ஷித்தருள வேணுமென்கிறுர். ....

அரு:—ஒன்பதாம்பாட்டு. (ஏதமிலித்யாதி) (மயங்கினர்) நெருக்குண்டு மோஹியா நின்றுர்கள். (நன்மணிவண்ணனூர்) என்றது-திருவேங்கடமுடையான் நாநாஜாதிகளையும் கடாக்ஷிக்குமாபோலே தேவரீரும் கடாக்ஷித்தருளவேணும். ... ...

§ நாலாந்-திரு-47.

10. கடிமலர்க்கமலங்கள் மலர்ந்தனவிவையோ
கதிரவன்கனைகடல் முளைத்தனனிவனோ
துடியிடையார்சுரிகுழல் பிழிந்துதறித்
துகிலுடுத்தேறினர்சூழ் புனலரங்கா
தொடையொத்ததுளவமும் கூடையும்பொலிந்து
தோன்றியதோள் தொண்டரடிப்பொடியென்னும்
அடியனை அளியனென்றருளியுன்னடியார்க்
காட்படுத்தாய் பள்ளியெழுந்தருளாயே.

பதவுரை:—புனல் சூழ்—திருக்காவேரி தீர்த்தத்தாலே சூழப்பட்ட, அரங்கா—ஸ்ரீரங்கத்தில் கண்வளர்ந்தருளுமவனே! கடி—பரிமளமுடைய, கமலம் மலர்கள்-தாமரைப் பூக்களானவை, மலர்ந்தன—(நன்றாக) மலர்ந்து விட்டன; கதிரவன்–(தாமரையை மலர்த்த வல்ல) ஸூர்யனானவன், கனை கடல்—கோஷஞ் செய்கையையே இயற்கையாகவுடைய கடலிலே, முளைத்தனன்–உதயகிரியிலே வந்து தோன்றினான்; துடி இடையார் — உடுக்கைபோன்ற (நுண்ணிய) இடையையுடைய மாதர், சுரி குழல்—(தமது) சுருண்டமயிர் முடியை, பிழிந்து உதறி— (நீர்ப் பசையறப்) பிழிந்து உதறிவிட்டு, துகில் உடுத்து—(தம்தம்) ஆடைகளை உடுத்திக்கொண்டு, ஏறினர்—கரையேறிவிட்டார்கள்; தோடை ஒத்த — ஒழுங்காகத் தொடுக்கப்பெற்ற, துளவமும்—திருத்துழாய் மாலையும், கூடையும்—பூக்குடலையும், பொலிந்து தோன்றிய—விளங்கா நிற்கப்பெற்ற, தோள்–தோளையுடைய, தொண்டரடிப்பொடி என்னும் — 'தொண்டரடிப்பொடி' என்ற திருநாமமுடைய, அடியனை-தாஸனை, அளியன் என்று அருளி-'கிருபை பண்ணுகைக்கு உரிய பாத்திரம்' என்று திருவுள்ளம்பற்றி (அங்கீகரித்தருளி) உன் அடியார்க்கு—தேவரீருடையார்களான பாகவதர்களுக்கு, ஆள் படுத்தாய்—ஆளாக்க வேணும்; (அதற்காக) பள்ளி எழுந்தருளாய்—திருப்பள்ளியை விட்டு எழுந்தருளவேணும்.

அவ:—பத்தாம்பாட்டு. நிகமத்தில், முதல்பாட்டுத் தொடங்கிச் சொன்ன தேவர்களோடு ரிஷிகளோடு வாசியற தேவரீர் பக்கல் ஒரு ப்ர

அவ:—நிகமத்தில்; (கடிமலரித்யாதி) உபக்ரமோபஸம்ஹாரங்கள் சேர்ந்திருக்கிறது, எங்ஙனேயென்னில்; §"அடியேன் செய்யும்

§ திருவிரு–*1*.

யோஜநங்கொண்டு மீளுமவர்களன்றிக்கே, தேவரீர் திருப்பள்ளி யுணர்ந் தருளும்போதைத் முகவிகாஸமே ப்ரயோஜநமாயிருக்கிற அடியேனுக்காகத் திருப்பள்ளியுணர்ந்தருளவேணுமென்று ப்ரார்த்தித்து முடிக்கிறார்.

வ்யா.—(கடிமலரித்யாதி) ஊரிலே தாமரையாயுள்ளவையெல்லாம் அலர்ந்து தோன்றி மதுவெள்ளமிடா நின்றன. (கதிரவனித்யாதி) அந்தத் தாமரையை அலர்த்தக்கடவ ஆதித்யனும், கீழ்திக்கிலே கோஷிக்கையே ஸ்வபாவமாகவுடைய ஸமுத்திரத்தில் உதயகிரியிலே வந்து தோன்றினான்.

விண்ணப்பம்'' என்று தொடங்கி, ||''மாறன் விண்ணப்பம்செய்த'' என்றும், †''நமக்கே பறைதருவான்'' என்று தொடங்கி /''அங்கப் பறைகொண்ட'' என்றும், 20. **''नाथाय मुनये''** (நாதாய முநயே) என்றுதொடங்கிப் பின்பு முடிகிறவிடத்திலும் 21. **''पितामहं नाथमुनिं विलोक्य''** (பிதாமஹம் நாதமுநிம் விலோக்ய) என்றும்—உபக்ரமோப ஸம்ஹாரங்கள் சேரக் கிடக்குமாபோலே, இவரும் உபக்ரமோபஸம்ஹாரங்கள் சேரத்தலைக்கட்டா நிற்கச்செய்தே இவருக் கோரேற்றமுண்டு; இப்பிரந்தம் தன்னில், பாட்டுக்குப் பாட்டு, போது வைகினபடி சொல்லுகையாயிற்று-கருத்து.

முதற்பாட்டிலே செய்தது-ஆதித்யனவன் உதயபர்வத்தை வந்தணுகினான்; ''தேசாந்தரம் போன பிள்ளைகள் வாராநின்றார்கள்'' என்று கேட்டால் அவர்களுடன் ஸ்பர்சமுடைய மநுஷ்யருக்கு முகத்திலே விகாஸமுண்டாமா போலே ஆதித்யனோடே தாமரைக்கு ஒரு சேர்த்தியுண்டிறே, அத்தாலே முன்பு நின்றமாத்ரையில் சிறிது விகஸிக்கக்கோலி அது கட்டு நெகிழ்கிறவளவிலே சித்ர(छिद्र)த்தின் வழியே தேன் ப்ரவஹித்ததென்றிறே சொல்லிற்று. இதில் அவ்வளவுமன்றியே, இத்தாமரையோடு சேர்த்தியுடைய ஆதித்யனும் உதித்து மேலே போனான்; தாமரைகளும் கழிய அலர்ந்தனவென்று போதுவைகினபடி சொல்லுகிறது.

வ்யா:-(கடிமலர்க் கமலங்கள் மலர்ந்தனவிவையோ)கடியென்று நறுநாற்றம். கந்தமுண்டாகச் சொல்லவேணுமோ? *வாசஞ்செய் பூங்குழலாளுடைய வாஸஸ்தாநமன்றோ. (மலர்ந்தனவிவையோ)

|| திருவிருத்தம்-100. † திருப்பாவை-1. / திருப்பாவை-30.

(துடியிடையாரித்யாதி) கண்டாரைப் பிச்சேற்றவல்ல இடையையும், மயிர் முடியையுமுடைய ஒரு தரத்தில் பெண்களெல்லாம் நீராடித் தந்தாம் பரியட்டங்கள் தாந்தாமே சாத்திச் சமைந்தார்கள். இத்தால்-பெரியபெருமாள் சிவட்கென்ன உணருகைக்காகப் பழைய யமுனை நீராட்டை ஸ்மரிப்பிக்கிறார். "பெரியபெருமாளாகிறார்-க்ருஷ்ணன்; நம்பெருமாளாகிறார்-சக்ரவர்த்தித்திருமகன்" என்றருளிச்செய்வர். (சூழ்புனலரங்கா) விரஜையையும், யமுனையையும், ஸரயுவையும் மறப்பிக்கும்படியான திருப்பொன்னியாலே சூழப்பட்ட கோயிலை நிரூபகமாகவுடைய தேவரீர், § பெருமாளுக்கு நிரூபகதர்ம மிருக்கிறபடி.

(தொடையொத்தவித்யாதி) தொடுக்கிறபோதே அங்குத்தைக்கு ஸத்ருசமாம்படி தொடுத்த திருமாலைகளும், திருப்படலிகையுமாய். (தோன்றிய

முன்பு சொன்னமாத்ரமேயல்ல, தேவரீர் கண்டருளவல்ல ‡ வளப்பு. (கதிரவன் கனைகடல் முளைத்தன னிவனோ) முனபும் இவன் ப்ரஸ்துதனான விடத்தில் 'இவனோ' என்றவிடமில்லை; இவனை வினவியருளீர்; அவனுக்கு தாரகம் தேவரீர் குசலப்ரச்நம் பண்ணுகையன்றோ. இவர்கள் தந்தாமுடைய ஸத்தாதாரக மிழக்குமளவல்ல; இவர்களை வினவியருளாதே தேவரீருடைய ஸத்தாதாரகமிழக்கப்புகாநின்றீர் என்கிறார் மேல்;

(துடியிடையாரித்யாதி) e "தோழியும் நானுந்தொழுதோம்" i "கோலங்கரிய பிரானே குருந்திடைக் கூறை பணியாய்" என்கிற இந்த ரஸமிழக்கப் புகாநின்றீர். இத்தால்—பழைய மடுவின் கரையையும், குருந்திலேறின படியையும் நினைக்கிறது. * கோவலனாய் வெண்ணெயுண்ட வாயனிறே பள்ளிகொள்ளுகிறவன். (சூழ்புனலரங்கா) / நீர்ச்சிரையிட்டுக் கொண்டு கண்வளர்ந்தருளலாமோ? (தொடையொத்த துளபமும்) திருமாலை யெடுத்தால் திருக்குழலுக்கும் திருமார்வுக்கு மளவாயிருக்கை. திருமாலையாயும், திருப்பரியட்டமாயும் † நிற்கிறப்போலே; சேதநவர்க்கமிறே.

(கூடையுப்பொலிந்து தோன்றியதோள்) || "ஆழியும் சங்குமுடைய நங்களடிகள்" என்று-அவை அவனுக்கு சேஷித்வஸூசகமிறே. 22. **"महात्मनः शङ्खचक्रासिपाणेः"** (மஹாத்மநச்சங்கசக்ராஸி

§ (பா) ஆழ்வார்க்கு. ‡ (பா) வளவு. e நாச்-திரு 3-1.
i நாச்-திரு 3-5. / (பா) நீரை. † நிற்கிறார். || பெரியதிரு 11-2-6.

வித்யாதி) ரக்ஷகரான பெருமாளுக்குக் கோயில் நிரூபகமானுப்போலே ஆழ்வாருக்கு நிரூபகதர்மமிருக்கிறபடி 5 "खनित्रपिटकाधरः" (கநித்ரபிடகாதர:) என்றும், 6. "लक्ष्मणो लक्ष्मिसंपन्नः" (லக்ஷ்மணோ லக்ஷ்மிஸம்பந்ந:) என்றும் சொல்லுகிற இளையபெருமாளைப்போலே சேஷபூதனுக்கு சேஷத்வ பரிகரமே ஐச்வர்யமாகக்கடவதிறே. "தொண்டரடிப்பொடி" என்று இவருடைய ப்ரஸித்தி ஜ்ஞாநாநந்தலக்ஷணமாகையன்றிக்கே ததீய சேஷத்வ பர்யந்தமாயிருக்கை. (அடியனையளியனென்றருளி) ஸ்நிக்தனென்று க்ருபைபண்ணியருளி, அச்சேஷத்வத்தின் எல்லையிலே நிறுத்தின தேவரீர் அடியேனுக்காகத் திருப்பள்ளியுணர்ந்தருளி அடிமைகொண்டருளவேணுமென்கிறார்.

நஞ்சீயர் திருவடிகளே சரணம்.

நஞ்சீயர் அருளிச்செய்த
திருப்பள்ளியெழுச்சி வ்யாக்யாநம் முற்றிற்று,

பாணே:) என்னுமாபோலேயிறே சேஷபூதனனவனுக்கும் திருப்படலிகை ஸூசகமாயிருக்கிறபடி. 23 "खनित्रपिटकाधरः" (கநித்ரபிடகாதர:) இத்யாதி. (தொண்டரடிப்பொடி) † [துளவத்தொண்டாய] திருத்துழாய்க்கெழுதிக்கொடுத்திருக்கும் ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு அடியேனென்றிருக்குமவர்; இவருடைய * அடியாரடியாரிருக்கிறபடி; இப்படிப்பட்ட ஸ்ரீவைஷ்ணவர்கள் ஸ்ரீபாதரேணுவென்கிறார். (அடியனை) இவ்வாத்மாவினுடைய ஆர்ப்பைத்துடைத்தால் நிலைநின்றபேர் இதுவிறே. (அளியனென்றருளி) ஸ்நேஹியென்று திருவுள்ளம்பற்றி. அங்ஙனன்றியே, தேவரீர் || அளிமிக்காரிறே; இஜ்ஜந்துவை க்ருபை பண்ணவடுக்குமென்று திருவுள்ளம்பற்றி. எல்லா ‡ மற்றுனென்று திருவுள்ளம்பற்றி. (உன்னடியார்க்காட்படுத்தாய்) உன்னளவிலே நிற்கில், முதல்நிலை; § "உனக்காட்பட்டு நின்கண்பெறுவதெதுகொலென்று பேதையேன் நெஞ்சம் மறுகல்செய்யும்" என்றபடி அடியார்க்காட்படுத்தாய். முதல்நிலையுமன்றியே, இவ்வருகில் ஸம்ஸாரமுமன்றியே, † "தொண்டர் தொண்டர் தொண்டன் சடகோபன்" என்னுமாபோலே, எல்லை நிலத்திலே நிறுத்தினாய்; "ரத்நம் பட்டது, முத்துப்பட்டது" என்னுமாபோலே. (பள்ளியெழுந்

† திருமாலை-45. || திருவாய் 4-8-5. ‡ (பா) முற்றுன்.
§ திருவாய் 9-4-4. † திருவாய் 8-9-11.

தருளாயே) அபிமதஸித்தியுண்டாளுலு முறங்குமித்தனையோ? தேவரீருடைய யோகநித்ரை பலபர்யந்தமாளுலு முறங்குமித்தனையோ?

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே சரணம்.

பெரியவாச்சான்பிள்ளை அருளிச்செய்த
திருப்பள்ளியெழுச்சி வ்யாக்யாநம் முற்றிற்று.

அரு:-பத்தாம்பாட்டு, (கடிமலரித்யாதி) மேலில் பதத்துக்கு அவதாரிகை அருளிச்செய்கிருர் (இவர்களித்யாதி.) திருமாலைகள் அங்குத்தைக்கு அநுரூபமாகக்கூடுமோவென்ன அருளிச்செய்கிருர் (திருமாலையாயுமித்யாதி). (படலிகை) திருப்பளித்தாமக்கூடை. சேஷத்வஸூசகமாக தரித்த பேர் உண்டோவென்ன அருளுகிருர் (கமித்ரேத்யாதி). (அளியன்) ஸ்நேஹியென்னுதல், தயநீயனென்னுதல்.

ஜீயர் திருவடிகளே சரணம்.

திருப்பள்ளியெழுச்சி வ்யாக்யாந அரும்பதம்
முற்றிற்று.

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

தனியன் வ்யாக்யான ப்ரமாணத்திரட்டு

1. ப்ரதிஜலதிதோ வேலாமய்யாம் விபீஷணகௌதுகாத்
புநரபி புரஸ்கர்த்தும் ஸ்ரீரங்கிண: பணிபுங்கவே ।
ஸமுபததத; கஞ்சித் கஞ்சித் ப்ரஸாரயதோ புஜ
த்வயமபி ஸதாதாநச்ரத்தாலு தீர்க்கமுபாஸ்மஹே ॥

[கடலுக்கு எதிர்முகமாகக் கடற்கரையில் பள்ளிகொண்டதை விபீஷணாழ்வானுடைய குதூஹலத்தினால் மறுபடியும் ஆதரித்து அங்கீகரிப்பதற்குப்போலே திருவனந்தாழ்வான் மீது ஒரு திருக்கையைத் தலையணையாக வைத்துக் கொண்டவரும், மற்றொரு திருக்கையை நீட்டிக்கொண்டிருப்பவருமான பெரியபெருமாளுடைய எப்போதும் கொடுத்துக் கொடுத்து நீண்டதான இரு திருக்கைகளையும் தியானிக்கிறோம்.]

2. வாஸுதேவோऽஸி பூர்ண:

[ஜ்ஞாநசக்தி பல ஐச்வர்ய வீர்ய தேஜஸ்ஸுக்களாகிற ஆறுகுணங்களும் நிறைந்த வாஸுதேவனாயிருக்கிறீர்]

3. பரவாநஸ்மி காகுத்ஸ்த த்வயி வர்ஷசதம் ஸ்திதே ।
ஸ்வயம் து ருசிரே தேசே க்ரியதாமிதி மாம் வத ॥

[ககுத்ஸ்த வம்சத்தில் பிறந்தவரே! நீர் இருக்கையில் எப்போதும் நான் (உமக்கு) அடிமையாயிருக்கிறேன். நீராகவே "அழகிய தேசத்தில் பர்ணசாலை கட்டப்படட்டும்" என்று என்னை ஆஜ்ஞையிடுவீராக.]

4. ஆத்மமாயாமயீம் திவ்யாம் யோகநித்ராம் ஸமாச்ரித: ।
ஆத்மாநம் வாஸுதேவாக்யம் சிந்தயந் மதுஸூதந: ॥

[தன் ஸங்கல்பமயமான யோகநித்திரை நிலையிலேயிருந்துகொண்டு வாஸுதேவனென்னும் பெயருள்ள தன் ஸ்வரூபத்தைச் சிந்தித்துக் கொண்டு.]

5. காவேரீ விரஜா ஸேயம் வைகுண்டம் ரங்கமந்திரம் ।
ஸ வாஸுதேவோ ரங்கேச: ப்ரத்யக்ஷம் பரமம் பதம் ॥

[இக்காவேரி அந்த விரஜாநதியேயாகும்; திருவரங்கம் பெரிய கோயில் வைகுண்டமாகும். இவ்வரங்கன அவ்வாஸுதேவனாவான்; இவ்வண்ணமாகப்பரமபதமே நம் கண்ணுக்கு விஷயமாயிருக்கிறது.]

6. த்வாதசாக்ஷரமந்த்ரோயம் மந்த்ராணாம் த்ராய உச்யதே

[இந்த திருத்வாதசாக்ஷரமந்திரம் மற்ற மந்திரங்களுக்கு ரக்ஷகமாகச் சொல்லப்படுகிறது.]

---

1. ர-ஸ்த 1-106. 2. 3. ரா-ஆ 15-7. 4. வி-பு 6-4-6. 5. ஸ்ரீரங்கமஹாத்ம்யம்.

7. ஸ்ரீரங்கநாத ஜகந்நாத
[ஸ்ரீரங்கநாதனே! லோகஸ்வாமியே!]

8. ரக்ஷோகணபரிக்ஷிப்தோ ராஜா ஹ்யேஷ விபீஷண: ।
ஸ்ரீமதா ராஜராஜேந லங்காயாமபிஷேசித: ॥
[ராக்ஷஸர்களால் சூழப்பெற்றவனாய், அரசனான இந்த விபீஷணன் அரசர்க்கரசனாய் ஸ்ரீமானான ராமபிரானாலே லங்காராஜ்யத்தில் அபிஷேகம் செய்விக்கப்பெற்றான்.]

9. ராஜாதிராஜஸ் ஸர்வேஷாம் விஷ்ணுர் ப்ரஹ்மமயோ மஹாந் ।
ஈச்வரம் தம் விஜாநீமஸ் ஸ பிதா ஸ ப்ரஜாபதி: ॥
[பரப்ரஹ்ம ஸ்வரூபியும், பெரியோனும், அரசர் அனைவர்க்கும் அரசனுமாயிருப்பவன் விஷ்ணு. ஈச்வரனான அவனை அறிவோம். அவனே தந்தை; அவனே ப்ரஜாபதி.]

10. வீர ஸௌம்ய விபுத்யஸ்வ கௌஸல்யாநந்தவர்த்தந ।
ஜகத்தி ஸர்வம் ஸ்வபிதி த்வயி ஸுப்தே நராதிப ॥
[கௌசல்யையின் இன்பத்தை வளர்க்கும் அழகனே! பள்ளியெழுந்தருள்வாயாக! அரசனே! நீ உறங்கினால் உலகெல்லாம் உறங்குகிறது.]

11. கௌஸல்யா ஸுப்ரஜா ராம பூர்வா ஸந்த்யா ப்ரவர்த்ததே ।
உத்திஷ்ட நரசார்த்தூல கர்த்தவ்யம் தைவமாஹ்நிகம் ॥
[கோசலையின் குலக்கொழுந்து ராமனே! விடியற்காலைநேரம் நடக்கின்றது. மனிதர்தலைவனே! பரமாத்மாராதனமான காலைக் கடன்களைச் செய்யவேண்டும்.]

12. தரளதநு தரங்கைர் மந்தமாந்தோள்யமாந
ஸ்வதட விடபிராஜீ மஞ்ஜரீ ஸுப்த ப்ருங்கா ।
க்ஷிபது கநகநாம்நீ நிம்நகா நாரிகேள
க்ரமுகஜ மகரந்தைர் மாம்ஸலாபா மதம்ஹ: ॥
[அசையும் மெல்லிய அலைகளாலே மெல்ல அலைக்கப்படுகின்ற தன் கரையிலுள்ள சோலைகளினுடைய பூங்கொத்துக்களிலே உறங்குகின்ற வண்டுகளையுடையதும், தென்னை பாக்குமரங்களிலிருந்து உண்டான மகரந்தம் நிரம்பிய நீரையுடையதுமான பொன்னியெனும் பெயரையுடைய காவேரி நதியானது என்னுடைய பாபத்தை அழிக்கட்டும்.]

தனியன் வ்யாக்யான ப்ரமாணத்திரட்டு முற்றிற்று.

---

7. 8. ரா-யு 28-7. 9. பார-ஆச்வ 43-13. 10. ரா-உ 37-4. 11. ரா-பா 23-2. 12. ர-ஸ்த 1-24.

ஸ்ரீ:
ஸ்ரீமதேராமாநுஜாய நம:

நஞ்சீயர் வ்யாக்யான ப்ரமாணத்திரட்டு

1. அநாதிமாயயா ஸுப்தோ யதா ஜீவ: ப்ரபுத்யதே

[அநாதிமாயையினால் உறங்கும் ஜீவன் எப்போது உணருகின்றானோ.]

2. தனியன் வயா ப்ர-தி— । ।

3. யஸ்யாவதாரரூபாணி நமஸ்யந்தி திவௌகஸ: ।
அபச்யந்த: பரம் ரூபம்

[எந்தப்பரமபுருஷனுடைய பரவாஸுதேவரூபத்தைக் காணமாட்டாமல் தேவர்கள் அவனுடைய அவதாரரூபங்களை நமஸ்கரிக்கிறார்களோ]

4. பரமாபதமாபந்நோ மநஸாऽசிந்தயத் ஹரிம் ।
ஸ து நாகவரச் ஸ்ரீமாந் நாராயணபராயண: ॥

[ச்லாக்யமான ஆபத்தை அடைந்தவனும், கைங்கர்யஸ்ரீயை உடையவனும், நாராயணனையே மேலான கதியாகக்கொண்டவனுமான அந்த கஜேந்திராழ்வான் மனத்தினாலே ஹரியை நினைத்தான்.]

5. ததுராதாய ஸுரம் கநித்ரபிடகாதர: ।
அக்ரதஸ்தே கமிஷ்யாமி பந்தாநமநுதர்சயந் ॥

[மண்வெட்டியையும் கூடையையும் தரித்தவனாய், அம்புடன் வில்லையும் எடுத்தவனாய் வழியைக் காட்டிக்கொண்டு உன்முன் செல்வேன்.]

6. ஸர்வப்ரியகரஸ்தஸ்ய ராமஸ்யாபி சரீரத: ।
லக்ஷ்மணோ லக்ஷ்மிஸம்பந்நோ பஹி: ப்ராண இவாபர: ॥

[கைங்கர்யலக்ஷ்மியை உடைய லக்ஷ்மணன், ராமனுக்கு சரீரத்தைக்காட்டிலும் எல்லாப் பிரியத்தையும் செய்பவனாகவும், வெளியிலிருக்கும் மற்றொரு ப்ராணன்போலவும் விளங்கினான்.]

நஞ்சீயர் வ்யாக்யான ப்ரமாணத்திரட்டு முற்றிற்று.
நஞ்சீயர் திருவடிகளே சரணம்.

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

பெரியவாச்சான்பிள்ளை
வ்யாக்யான ப்ரமாணத்திரட்டு

1. யா: க்ரியா: ஸம்ப்ரயுக்தா: ஸ்யுரேகாந்தகதபுத்திபி: ।
தா: ஸர்வா: சிரஸா தேவ: ப்ரதிக்ருஹ்ணாதி வை ஸ்வயம் ॥

[மறந்தும் புறந்தொழாமையில் நிலைநிற்கும் அறிவையுடையவர்களாலே யாவை சில கிரியைகள் நன்கு அனுஷ்டிக்கப்படுகின்றனவோ, அவை யெல்லாவற்றையும் தேவன் தானே தலையாலே ஏற்றுக்கொள்ளுகிறான்.]

---

1. கௌட பாதகாரிகை. 3. 4. விஷ்ணுதர் 69-47.
5. ரா-அ 31-25. 6. ரா-பா 18-28. 1. பார-மோக்ஷ 171-63.

2. தனியன் வ்யா ப்ர-தி-4.

3. அநித்ரஸ் ஸததம் ராம: ஸுப்தோऽபி ச நரோத்தம: ।
ஸீதேதி மதுராம் வாணீம் வ்யாஹரந் ப்ரதிபுத்யதே ॥

[(ஸீதையைப் பிரிந்த) ராமன் எப்போதும் தூக்கமற்றவராகவே இருக்கிறார்; நரச்ரேஷ்டரான அவர் தூங்கினாலும் 'ஸீதே' என்னும் அழகிய சொல்லை உச்சரித்துக்கொண்டே விழித்தெழுகிறார்.]

4. தனியன் வ்யா ப்ர-தி-11

5. வாயஸேந ததஸ்தேந பலவத் க்லிச்யமாநயா ।
ஸ மயா போதித: ஸ்ரீமாந் ஸுகஸுப்த: பரந்தப: ॥

[பிறகு, அந்தக் காகாஸுரனால் பலாத்காரமாகத் துன்புறுத்தப்பட்ட என்னால், ஸுகமாகக் கண்வளர்ந்தருளியவரும், (அத்தாலே) அழகாயிருப்பவரும், எதிரிகளைத் தபிப்பவருமான ஸ்ரீராமபிரான் எழுப்பப்பட்டார்.]

6. பவாம்ஸ்து ஸஹ வைதேஹ்யா கிரிஸாநுஷு ரம்ஸ்யதே ।
அஹம் ஸர்வம் கரிஷ்யாமி ஜாக்ரதஸ் ஸ்வபதச்ச தே ॥.

[நீர் வைதேஹியுடன் கூட மலைத்தாழ்வரைகளில் விளையாடுவீர்; அடியேன் நீர் விழித்துக்கொண்டிருக்கும்போதும் தூங்கும்போதும் உமக்கு எல்லா அடிமைகளையும் செய்வேன்.]

7. தனியன் வ்யா ப்ர-தி-3.

8. பீஷாऽஸ்மாத் வாத: பவதே । பீஷோதேதி ஸூர்ய: ॥
பீஷாऽஸ்மாதக்நிச்சேந்த்ரச்ச । ம்ருத்யுர் தாவதி பஞ்சம: ॥

[இந்தப் பரமபுருஷனிடத்தில் பயத்தாலேயே காற்று அடிக்கிறது; (இவனிடத்தில்) பயத்தாலேயே ஸூர்யன் உதிக்கிறான்; அக்னியும், இந்திரனும் ஐந்தாமவனான ம்ருத்யுவும் இவனிடத்தில் பயத்தினாலேயே தங்கள் காரியத்தைச் செய்கிறார்கள்.]

9. ப்ராஹ்மே முஹூர்த்தே சோத்தாய சிந்தயேதாத்மநோஹிதம் ।
ஹரிர் ஹரிர் ஹரிரிதி வ்யாஹரேத் வைஷ்ணவ: புமாந் ॥

[வைஷ்ணவனான புருஷன் விடியற்காலைவேளையில் எழுந்து தனக்கு நன்மையைச் சிந்திக்கக்கடவன்; "ஹரி: ஹரி: ஹரி:" என்று மூன்று தடவை சொல்லக்கடவன்.]

10. அதந்த்ரித சமூபதி ப்ரஹிதஹஸ்த மஸ்வீக்ருத-
ப்ரணீத மணிபாதுகம் கிமிதி சாகுலாந்த:புரம் ।
அவாஹந பரிஷ்க்ரியம் பதகராஜமாரோஹத:
கரிப்ரவரப்ரும்ஹிதே பகவதஸ் த்வராயை நம: ॥

---

3. ரா-ஸு 36-44. 5. ரா-ஸு 38-25. 6. ரா-அ 31-25.
8. தைத்-ஆந 8-1. 9. பராசரஸ்ம்ருதி. 10. ர-ஸ்த 2-57.

[கஜேந்திராழ்வானுடைய கூக்குரல் செவிப்பட்டவுடன், சேனை முதலியார் கொடுத்த கைலாகை மதியாமலும், கொண்டுவரப்பட்ட ரத்ன பாதுகையை ஏற்காமலும், 'இதுவென்! இதுவென்!' என்று திவ்ய மஹிஷிகள் திகைக்கவும், வாஹனாலங்காரமில்லாமலும், பெரியதிருவடியின்மீது ஏறுகின்ற எம்பெருமானுடைய வேகத்திற்கு நமஸ்காரம்.]

11. தம் த்ருஷ்ட்வா தே ததா தேவா: ஶங்கசக்ரகதாதரம் ।
அபூர்வ ரூபஸம்ஸ்தாநம் தேஜஸாம் ராஶி மூர்ஜிதம் ॥

[சங்கசக்ரகதாதரனும், அபூர்வமான திருமேனி அமைப்பையுடையவனும், உறுதியானவனும், தேஜோராசியான அந்த பகவானைக் கண்ட தேவர்கள் (துதிக்கத் தொடங்கினர்).]

12. சந்த்ரகாந்தாநநம் ராமமதீவ ப்ரியதர்ஶநம்

[சந்திரன் போன்று அழகியவனும், மிகவும் இனிய காட்சியை உடையவனான ராமனை (தசரதன் கண்டான்)]

13. ஆஹாரநித்ரா பயமைதுநாநி துல்யாநி கல்வத்ர ஸமஸ்தஜந்தோ:।
ஜ்ஞாநாத் விஶிஷ்டோ ஹி நர: பரேப்யோ ஜ்ஞாநேந ஹீந:
பசுபிஸ் ஸமாந: ॥

[ஆஹாரம், நித்திரை, பயம், ஸ்த்ரீ புருஷஸங்கமம் என்பவை இங்கு எல்லா ஜந்துக்களுக்கும் ஸமானம். மற்றவைகளைக்காட்டிலும் மனிதன் அறிவினால் மேலானவனாயிருக்கிறான். ஞானமற்றவன் பசுக்களுக்கு ஸமானமானவன்.]

14. நேயமஸ்தி புரீ லங்கா ந யூயம் ந ச ராவண: ।
யஸ்மாதிக்ஷ்வாகுநாதேந பத்தம் வைரம் மஹாத்மநா ॥

[மஹாபுருஷனும், இக்ஷ்வாகுகுலநாதனுமான ராகவனால் விரோதம் வைக்கப்பட்டதாகையால், இந்த லங்காபுரியும், நீங்களும், ராவணனும் அஸத்ஸமராய்விட்டீர்கள்.]

15. ஸீதாயாஸ் தேஜஸா தக்தாம் ராமகோபப்ரபீடிதாம்
தஹ்யமாநாமிமாம் பச்ய புரீம் ஸாட்ட ப்ரதோளிகாம்

[சீதையின் தேஜஸ்ஸாலே எரிக்கப்பட்டதும், ராமனுடைய கோபத்தால் பீடிக்கப்பெற்றதுமான இந்நகர் மாடங்களோடும் வீதிகளோடும் எரியப்போவதைப்பார்.]

16. தீப்தபாவகஸங்காஶை: ஶிதை: காஞ்சந பூஷணை: ।
ந த்வாமிச்சாம்யஹம் த்ரஷ்டும் ராமேண நிஹதம் ஶரை: ॥

---

11. வி–பு 1–9–67. 12. ரா–அ 3–29. 13. நரஸிம்ஹ புராணம் 16–13.
14. ரா–ஸு 43–25. 15. ரா–ஸு 51–37. 16. ரா–யு 16–22.

[எரியும் நெருப்புப்போன்றவையும், கூர்மையானவையும், பொன்னுல் அலங்கரிக்கப்பெற்றவையுமான அம்புகளைக்கொண்டு ராமனுலே நீ கொல்லப்படுவதை நான் காணவிரும்பவில்லை.]

17. ஏஹி பச்ய ஶரீராணி முநீநாம் பாவிதாத்மநாம் ।
ஹதாநாம் ராக்ஷஸைர் கோரைர் பஹூநாம் பஹுதா வநே ॥

[ராம! (இங்கு) வருவாயாக; பரமாத்மாவை தியானம் செய்பவர்களும், வனத்தில் கோரமான ராக்ஷஸர்களால் பலவிதமாக ஹிம்ஸிக்கப்பட்டவர்களுமான பல முனிவர்களுடைய சரீரங்களைப் பார்ப்பாயாக.]

18. தஶவர்ஷஸஹஸ்ராணி தஶவர்ஷ ஶதாநி ச ।
ராமோ ராஜ்யமுபாஸித்வா ப்ரஹ்மலோகம் கமிஷ்யதி ॥

[பதினோராயிரம் வருடம் ராமபிரான் ராஜ்யத்தை ஆண்டு பரப்ரஹ்மமாகிற தன் லோகத்தை அடைவான்.]

19. ஸோऽப்ரவீத் வரம் வ்ருணு அஹமேவ
பசூநாமதிபதிரஸாநீதி தஸ்மாத் ருத்ர: பசூநாமதிபதி:

["நானே பசுக்களைப்போன்ற ஸம்ஸாரிகளுக்கு அதிபதியாயிருக்கக்கடவேன் என்னும் வரத்தை நான் தேவர்களான உங்களிடமிருந்து வரிக்கிறேன்" என்று அந்த ருத்ரன் உரைத்தான்.]

20. நமோऽசிந்த்யாத்புதாக்லிஷ்டஜ்ஞாநவைராக்ய ராஶயே ।
நாதாய முநயேऽகாதபகவத்பக்திஸிந்தவே ॥

[(இப்படிப் பட்டதென்று) நினைக்கமுடியாததும், ஆச்சர்யமானதும், (பகவானுடைய அருளாலே)எளிதாகக் கிடைத்ததுமான ஞானத்தினுடையவும் வைராக்யத்தினுடையவும் குவியல் போன்றவராகவும் பகவானை மனனம் செய்பவராகவும், ஆழ்ந்த பகவத் பக்திக்குக் கடலாகவுமிருக்கிற நாதமுனிகளுக்கு நமஸ்காரம்.]

21. அக்ருத்ரிமத்வச்சரணாரவிந்த ப்ரேமப்ரகர்ஷாவதிமாத்மவந்தம் ।
பிதாமஹம் நாதமுநிம் விலோக்ய ப்ரஸீத மத்வ்ருத்தமசிந்தயித்வா ॥

[என்னுடைய நடத்தையை நினைக்காமல், உன்னுடைய திருவடித்தாமரைகளில் இயற்கையாயிருக்கும் மேலான அன்பிற்கு எல்லைநிலமாயிருப்பவரும் ஆத்மஸ்வரூபத்தை உணர்ந்தவரும், எனக்குப் பாட்டனுருமாகிய நாதமுனிகளைக் கடாக்ஷித்து (என்னை) க்ஷமித்தருளவேண்டும்.]

22. வர்ஷாயுதைர் யஸ்ய குணா ந ஶக்யா
வக்தும் ஸமேதைரபி ஸர்வலோகை: ।
மஹாத்மந: ஶங்கசக்ராஸிபாணேர்
விஷ்ணோர் ஜிஷ்ணோர் வஸுதேவாத்மஜஸ்ய ॥

---

17. ரா–ஆ 6–16. 18. ரா–பா 1–97. 19. யஜு–ஸம் 6–2–3.
20. ஸ்தோ–ர–1. 21. ஸ்தோ–ர 65. 22. பார–கர்ண 83–65.

[மஹாபுருஷனும், சங்கசக்ரங்கள், வாள் ஆகியவற்றைக் கையில் ஏந்தியிருப்பவனும், ஸர்வவ்யாபியும், ஜயசீலனும், வஸுதேவபுத்திரனுமான எவனுடைய குணங்கள் பதினாயிரம் வருஷங்களிலும் எல்லா உலகங்களும் கூடியும் பேசமுடியாதவையோ,]

23. நஞ்சீயர் வ்யா ப்ர-தி 5.

பெரியவாச்சான்பிள்ளை வ்யாக்யான ப்ரமாணத்திரட்டு முற்றிற்று.
பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே சரணம்.

ப்ரமாணத்திரட்டு அட்டவணை

[* இக்குறி எண்ணுக்கு முன் இருந்தால் தனியன் வ்யாக்யான ப்ரமாணத்திரட்டென்றும், பின் இருந்தால் நஞ்சீயர் வ்யாக்யான ப்ரமாணத்திரட்டென்றும், இல்லாமலிருந்தால் பெரியவாச்சான்பிள்ளை வ்யாக்யான ப்ரமாணத்திரட்டென்றும் கொள்வது.]

அ
அதந்த்ரித 10
அநாதிமாயயா 1*
அமித்ரஸ்ஸத 3
அஹம் ஸர்வம் 6

ஆ
ஆத்மாநம்வரஸு *4

உ
உத்திஷ்டநர 4

ஏ
ஏஹிபச்ய 17

க
காஞ்சநபூஷணை: 16
காவேரீ *5
கௌஸல்யா *11
க்ரியதாமிதி *3

ख
கநித்ரபிடகா 5*

ச
சந்த்ரகாந்தா 12

த
தேஜஸாம்ராசி 11

द
தசவர்ஷ 18
த்வாதசாக்ஷர *6

ந
நாதாயமுநயே 20
நேயமஸ்தி 14

ப
பரமபத 4*
பசூநாமதி 19
பிதாமஹம் 21
புநரபி *1

ब
ப்ரரஹ்மே 9

भ
பீஷோதேதி 8

ம
மஞ்ஜரீஸுப்த *12
மஹாத்மந:சங்க 22

ய
யஸ்யாவதார 3*

ர
ராஜாதிராஜ: *9

ல
லக்ஷ்மணோலக்ஷ்மி 6*

வ
வாஸுதேவோஸி *2
வீரஸௌம்ய *10

ஶ
சிரஸாதேவ: 1
ஸ்ரீமதாராஜ *8
ஸ்ரீரங்கநாத *7

ஸ
ஸமயாபோதித: 5
ஸீதாயாஸ்தேஜஸா 15

ஜ் ஞ
ஜ்ஞாநேந ஹீந: 13

பிழை திருத்தம்

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
2	23	क्रियाता	क्रियता
3	32	ரோணும்	ரேணும்
6	15	ப்ருபங்கா	ப்ருங்கா

ஸ்ரீஸூக்திமாலா வெளியீடுகள்

[பதவுரை, அரும்பதவுரை, ப்ரமாணத்திரட்டு முதலான
வற்றோடுகூடிய பூர்வாசார்ய க்ரந்தங்கள்]

க்ரந்தங்கள்	விலை	தபாற் கூலி
1. பரந்த ரஹஸ்யம் முதலிய எட்டு ரஹஸ்யங்கள்	1-8-0	3
2. ஸ்தோத்ரரத்ந சதுச்லோகீ ஜிதந்தே வ்யாக்யானங்கள்	3-0-0	6
3. திருப்பல்லாண்டு வ்யாக்யானம்	1-8-0	3
4. முதல் திருவந்தாதி வ்யாக்யானம்	1-14-0	4
5. பெருமாள் திருமொழி வ்யாக்யானம்	1-14-0	4
6. திருமாலை வ்யாக்யானம்	2-12-0	5
7. திருவாசிரியம் பெரிய திருவந்தாதி வ்யாக்யானம்	1-10-0	4
8. சது:ச்லோகீ வ்யாக்யானம் (நாயனாராச்சான்பிள்ளை)	1-8-0	3
9. கத்ய வ்யாக்யானங்கள்	2-0-0	4
10. நாச்சியார் திருமொழி வ்யாக்யானம்	4-0-0	8
11. திருச்சந்த விருத்த வ்யாக்யானம்	3-0-0	6
12. நான்முகன் திருவந்தாதி வ்யாக்யானம் (விவரணத்துடன்)	2-8-0	6
ஷை மலிவுப்பதிப்பு	2-0-0	6
13. ஸ்ரீராமாயண தனிச்லோகம் (விவரணத்துடன்)	3-8-0	6
ஷை மலிவுப் பதிப்பு	2-12-0	6
14. திருப்பள்ளியெழுச்சி வ்யாக்யானம்	0-8-0	1

ஸ்ரீவைஷ்ணவ ஸுதர்சனம் வெளியீடுகள்

1. திருப்பல்லாண்டு வ்யாக்யானம்	1-8-0	
2. திருப்பாவை வ்யாக்யானம்	2-4-0	4
3. ஸந்த்யா வந்தந பாஷ்யம்	2-4-0	4
4. புருஷஸூக்த வ்யாக்யானம்	0-12-0	
5. நாராயணஸூக்த வ்யாக்யானம்	0-12-0	
6. ஸ்ரீஸூக்த வ்யாக்யானம்	2-0-0	6
ஷை மலிவுப் பதிப்பு	1-8-0	6
7. அபயப்ரதராஜ விஜயம்	0-10-0	
8. கம்பராமாயணம் (கையடைப்படலம் முடிய)	2-8-0	6
9. ராமாநுஜதேசிக ஸ்தோத்ரங்கள்	1-0-0	3
10. பலதாரமணம்	0-4-0	
11. பாகவத தசமஸ்கந்த கீர்த்தனை பூர்வ பாகம்	4-0-0	
ஷை உத்தர பாகம்	4-0-0	

கிடைக்குமிடம்:—

ஸ்ரீ. கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார், அட்வகேட்,

3, புத்தூர் அக்ரஹாரம், திருச்சி.

ஸ்ரீநிவாஸம் பிரஸ், புத்தூர், திருச்சி.